உ

ஸ்ரீமீனாட்சி சுந்தரேசர் துணை.

## மதுரைச்சொக்கநாதர்

# தமிழ் விடு தூது.

இது
சென்னை,
மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

**Dr. உ. வே. சாமிநாதையரால்**

பரிசோதிக்கப்பெற்றுத்
தாம் நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

சென்னை :
கேசரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது.

இரண்டாம் பதிப்பு.

ஆங்கிரஸஹு ஆவணிமீ
1932

Copyright Registered.]

[விலை அணா 5.

# இப்புத்தகத்திலடங்கியவை.


| | | |
|---|---|---|
| | | பக்கம். |
| 1. | முகவுரை .... .... | iii-xv |
| 2. | குறிப்புரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கும் நூற்பெயர் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி | xvi |
| 3. | தமிழ்விடுதூது மூலமும் குறிப்புரையும் .... | 1-43 |
| 4. | ஆராய்ச்சிக் குறிப்பு .... .... | 44-8 |

*அரும்பதங்கள், இலக்கணப்பகுதிகள்—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, இசை, நாடகத்தமிழ், பிரபந்தங்கள், பிறபகுதிகள்—இலக்கணப் பிரயோகங்கள், எடுத்தாண்ட செய்யுட்களையுடைய நூற்பெயர்கள், சிதைந்த சொற்கள், தலங்களும் ஊர்களும், திருவிளையாடல்கள், தெய்வங்கள், நதிகள், நாயன்மார்களும் பிற அடியார்களும், நூல்கள் (தமிழ்) முதலியன, புலவர்களும் ஆசிரியர்களும், மதுரையின் திருநாமங்கள், வடமொழி நூல்கள்.*

உ

கணபதி துணை.

# முகவுரை.

---

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய்த் திருத்தாண்டகம்.

வாயானை மனத்தானை மனத்து ணின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் றன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்ற
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றுஞ்
சேயானைத் தென்கூடற் றிருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே.

திருச்சிற்றம்பலம்.

---

தமிழ் மொழியிலுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைப்படும். அவற்றுள் தூதென்பது ஒன்று. அது, தலைவன் தலைவிகளுள் விரகத்தால் துன்புற்ற ஒருவர் மற்றொருவர்பால் தம்முடைய வருத்தத்தைத் தெரிவிக்கும்படி உயர்திணைப் பொருள்களையேனும் அஃறிணைப்பொருள்களையேனும் விடுப்பதாகக் கல்வியில் வல்லுநராற் பாடப்படுவது. மேக ஸந்தேசம், ஹம்ஸ ஸந்தேசம் முதலியவற்றாலும், ஸ்ரீ பாகவதத்திற் பத்தாங் கந்தத்தில் ஒரு வண்டைக்கண்டு கண்ணபிரான் விடுத்த தூதாக நினைந்து அதனை நோக்கிக் கோவியர்கள் விரகவேதனையாற் பலபடக் கூறியதாக அமைந்துள்ள பகுதியாலும் வடமொழியிலும் இவ்வழக்குண்மை அறியலாகும்.

இது தமிழிற் கலிவெண்பாவாற் செய்யப்படவேண்டும்; இதன் இலக்கணம், "பயிறருங் கலிவெண் பாவி னாலே, உயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையுஞ், சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப், பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே" (இ. வி. சூ. 874) என்னும் சூத்திரத்தாலும் அதன் உரையாலும் உணரப்படும்.

*அஃறிணைப் பொருள்கள், ஒருவர் சொல்வனவற்றைக்கேட்டறிந்து தூதுசென்று ஒருவரிடம் தெரிவித்து அவர் கூறும் விடையையறிந்துவரும் அறிவுடையனவல்லவேனும் அங்ஙனம் அவற்றை விளித்துத் தூதுபோகச் செய்தற்குத் தலைவன் தலைவிகளுடைய மனமயக்கமே காரணமென்பர். இதன்பாற்பட்டதே காமமிக்க கழிபடர் கிளவியென்னும் அகத்திணைத் துறையும். இதுபோன்ற நிகழ்ச்சிகளை நோக்கியே, "கேட்குந போலவுங் கிளக்குந போலவும், இயங்குந போலவு மியற்றுந போலவும், அஃறிணை மருங்கினு மறையப் படுமே" (நன். சூ. 409) என்னும் சூத்திரம் எழுந்தது போலும்.

தூதாகச் செல்லற்குரிய பொருள்கள் இன்னவையென்பதை, "இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை, பயம்பெறுமே கம் பூவை பாங்கி - நயந்தகுயில், பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே, தூதுரைத்து வாங்குந் தொடை" (7) என்னும் இரத்தினச்சுருக்கச் செய்யுள் புலப்படுத்தும். இப்பொருள்களுள் ஒவ்வொன்றைத் தூது போக்கியதாகப் பெரியோர்களாற் பண்டைக்காலந் தொடங்கித் தனித்தனியே தமிழிற் செய்யப்பட்டுள்ள நூல்கள் ஒவ்வொரு வகையினும் பல உண்டு.

அன்றி, அவ்வக்காலத்திற் கவிஞர்களாற் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப, மேற்காட்டிய இரத்தினச்சுருக்கச் செய்யுளிற் கூறப்படாத பொருள்கள் சிலவற்றைத் தூதுவிட்டதாகப் பாடிய பிரபந்தங்களும் பல உள்ளன. அவை வனசவிடு தூது, நெல்விடு தூது, துகில்விடு தூது முதலியன; பின்னும் அன்றில், இருள்வாசி (இருவாட்சி), குவளை, சண்பகம், பாரிசாதம், பிச்சி முதலியவற்றின் மலர்கள், நாகணவாய்ப்புள், புறவு, பொன் முதலியனவும் தூதுக் குரியனவாகத் தத்தம் நூல்களிற் கவிஞர்கள் புலப்படுத்தியிருக்கின்றனர். புகையிலைவிடுதூதென்னும் ஒரு பிரபந்தம் பிற்காலத்ததாகக் காணப்படுகின்றது.

இவை, இயற்றிய ஆசிரியர்களுடைய அறிவாற்றல்களைப்புலப்படுத்துவனவன்றிப் பாட்டுடைத் தலைவர்கள் வரலாறுகளையும் தூதிற்குரிய பொருள்களின் பெருமையையும் பலவகையாகப் பாராட்டிச் சொல்லணி பொருளணிகளை ஆங்காங்குடையனவாய்த் தமிழ்ப்பயிற்சியுடையவர்கள் மனத்தை வேறொன்றிற் செல்லாதபடி கவர்ந்து தமிழ்ச்சுவையை ஊட்டா நிற்கும்.

---

* தொல். பொருளியல், சூ. 2; செய். சூ. 202, பார்க்க.

இத்தூதுகள் கலம்பகம் அந்தாதி முதலியவற்றில் இடையிடையே அமைக்கப் பெற்றிருத்தலும் உண்டு.

தேவார முதலிய திருமுறைகளிலும் திவ்யப்பிரபந்த முதலியவற்றிலும் தூதின் வகைகள் பல ஆங்காங்கு அமைந்துள்ளன.

குணமாலை யென்பவள் கிளியைச் சீவகனிடத்தில் தூது விடுத்ததாகச் சீவகசிந்தாமணியிற் கூறப்பட்டிருக்கும் பகுதியும், வாசவதத்தையின் பிரிவாற்றாமையினால் வருந்திய உதயணன் மான் முதலியவற்றை நோக்கிக்கூறியதாக உள்ள பெருங்கதைப் பகுதியும் (உ.2: 143-206) இங்கே அறியற்பாலன.

இவற்றை ஊன்றிப்பார்க்கையில் தமிழ்ச்சுவைகளைத் தாமே நுகர்ந்தவர்களும் நுகர்வித்தவர்களுமாய்ப் பண்டைக்காலத்திருந்த அருங்கலை விநோதர்களுடைய உபகாரச் செயல்கள் வெளியாகும்.

தமிழைத் தூது விடுத்ததாக ஒருபிரபந்தமும் இதுகாறும் காணப்படாவிடினும் அங்ஙனங் கூறுதலும் மரபென்பது, கவிஞர் பெருமானாக விளங்கிய திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய கச்சிஆனந்த ருத்திரேசர் வண்டுவிடு தூதில், "சேந்தமிழைச் செம்பொன்னைச் சேர்ப்பினவை தாஞ்செல்லா" என்று கூறியிருப்பதால் அறியலாகும். நிற்க.

தமிழ்விடுதூதென்பது மதுரைச் சோமசுந்தரக்கடவுள்பாற் காதல் கொண்ட ஒரு தலைவி விரகத்தால் துன்புற்றுத் தமிழை அவர்பால் தூது விடுத்ததாக இயற்றப்பெற்றது.

இது புறத்திணைத் துறைகளுள், கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின்பாற்படும்.

இதனை இயற்றிய ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. ஆனாலும் இந்நூலின் அமைப்பைப்பார்க்கையில் அவர், தமிழ் மொழியில் மிக்க பயிற்சியுள்ளவரென்றும், பரந்த கேள்வியுடையவரென்றும், சிவபெருமானிடத்தும் நாயன்மார்களிடத்தும் அன்பு வாய்ந்தவரென்றும், ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடல்களில் ஈடுபட்டு இடைவிடாது அவற்றை எண்ணி மனமுருகுபவரென்றும், வடமொழிச்சொற்களையும் சொற்றொடர்களையும் இடத்திற்கேற்ப அமைக்கும் இயல்புடையவரென்றும், தாம் அறிந்தின்புறுவதைத் தமிழுலகும் அறிந்து இன்புறச் செய்ய வேண்டுமென்னும் கொள்கையுடையவரென்றும் தெரிகின்றன.

பிரபந்தம் செய்பவர்களுடைய நோக்கம் இதுதானென்பதை யாவரும் அறிந்திருத்தல் கூடும். சொக்கநாதக் கடவுள்பால் அமைந்துள்ள அன்பின் மிகுதியே இச்செய்யுளாக வெளிப்பட்டதென்று சொல்லுதல் மிகையாகாது.

இந்நூல், 268 கண்ணிகளையுடையது.

முதல்நான்கு கண்ணிகளில், சிவபெருமான், தடாதகைப் பிராட்டியார், விநாயகக்கடவுள், முருகவேளென்னும் தெய்வங்களையும், ரு-ஆவது கண்ணிமுதலியவற்றிற் சைவசமயாசாரியர்கள் நால்வரையும், கூ-ஆவது முதலியவற்றில் அகத்தியர், தொல்காப்பியர் முதலியவர்களையும் ஆசிரியர் எடுத்துக்கூறி, "எல்லாரும் நீயா இருந்தமையால் உன் பொன்னடிகளே புகலாப் போற்றினேன்" என்று தமிழை நோக்கித் தலைவிகூறுவதாகத் தொடங்கி, "பஞ்சிபடா நூலே, பலர் நெருடாப் பாவே, அழுக்கேறுக் கலையே, நிறம் தோயாத செந்தமிழே, சொல்விளையும் செய்யுளே" எனத் தமிழை விளித்து, உ0-ஆங் கண்ணிமுதல், தமிழை அரசனாக உருவகஞ் செய்யப்புகுந்து அதன் பிறப்பு முதலியவற்றைக் கூறுவாராய் எழுத்திலக்கணங்கூறுதல் வாயிலாகப் பிள்ளைப்பருவங்கூறி, உஅ-ஆவது முதலியவற்றில் தமிழுக்குரிய இயற்கையழகாக, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் இயற்றமிழிலக்கணங்களை உருவகித்து, ௩0-ஆவது முதல் ஏனை இசையையும் நாடகத்தையும் தேவியர்களாகவும் ஒன்பது சுவைகளையும் பிள்ளைகளாகவும் கூறி, எல்லாரோடும், "நாடகமாம் பெண்கொலுவில் வீற்றிருக்கப்பெற்றாயே" என்று தமிழின் இலக்கணங்களெல்லாம் முற்றிய நிலையை எடுத்துரைத்து, அரசாட்சிக்குரிய செங்கோல், குறுமன்னரியல்பு, நாட்டெல்லை, அரண்மனையெல்லை என்பவற்றையும் முறையே விளக்குகின்றார்.

பின்னர், வடமொழி நூல்களைத்தமிழரசிற்குரிய உறுதிச்சுற்றங்களாக அமைப்பாராய், வேதாகமங்களைப் புரோகிதராகவும் காவிய நாடகங்களைத் தோழர்களாகவும் சாத்திரங்களைச் சேனாபதிகளாகவும் இதிகாச புராணங்களைச் சேனைகளாகவும் உருவகம் செய்திருக்கிறார்.

அதன் பின், பலபடைகளோடு (படை-ஆயுதங்கள், சேனைகள்) எழுந்து, தமிழரசு பல இடங்களைக்கடந்து சங்கப்பலகையாகிய சிங்காதனத்தில் வீற்றிருந்ததாகச் சொல்லுகிறார். இப்பகுதியில்,

பல சித்திரகவிகளின் பெயர்கள் சிலேடையாக அமைக்கப் பெற்றுள்ளன.

௫௦-ஆவது கண்ணி முதலியவற்றில், தேவாரதிருவாசகங்களையும், பிற திருமுறைகளையும், தமிழ்க்காப்பியங்களையும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய சங்கநூல்களையும், கலம்பகம் பரணி உலா பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களையும் தமிழரசின் மெய்காப்பாளராக உருவகஞ் செய்து இத்துணை உறுப்புக்களும் அமைய, "வீரியஞ் செய்து வினையொழியவே ராச, காரியஞ் செய்யுங் கவிதையே" என்கிறார்.

இப்பகுதியில் தேவாரம் முதலியவற்றைச் சங்கநூல்கட்கு முற்கூறினமையின் ஆசிரியர் சைவாபிமானம் உடையவரென்பதும், இந்நூல்களை மெய்காப்பாளராகக் கூறினமையின் இவற்றாலேயே கன்னித்தமிழென்பதற்கேற்பத் தமிழ்மொழி யாதொரு சிதைவுமின்றி நின்று நிலவுகின்றதென்ற கருத்துள்ளவரென்பதும் புலனாகின்றன.

அப்பால் தமிழை இனிய கனியாக உருவகம் செய்யத் தொடங்கி, பாவாகிய வரம்பும் இனங்களாகிய மடைகளுமுள்ள பரப்பில் நாற்கரணமாகிய ஏரைப் பூட்டிச் சொல்லேருழவர் நான்கு நெறியாகிய விதையை விதைத்து வளர்க்கையில், இடையூறு செய்ய எழுந்த கல்வியில்லாத வறுங்கோட்டியாளர்களாகிய களைகளைச் சிலர் பறித்தெறியவளர்ந்து, பால் முந்திரிகை கரும்பு தேங்காயென்னும் பாகங்களோடு அமுதச் சுவையைப் பெற்றுப் பழுத்த, "முத்திக்கனியே" என விளித்து, "உன்னோடுவந்துரைக்கும் விண்ணப்ப மொன்று விளம்பக்கேள்" என்று தூது விடும் தலைவி சொல்லுவதாகக் கூறியுள்ளார்.

அதன் மேல், தமிழைப் பாராட்டுகையில், "சிந்தாமணியென்றிருந்த உன்னைச் சிந்தென்று சொல்லிய நாச்சிந்துமே" என்றும், எல்லாப் பொருள்களினும் தமிழ் உயர்வுடையதென்பதைப் புலப்படுத்துவாராய், "மும்மூர்த்திகளும் முக்குணமேயுடையார்; நீயோ பத்துக்குணம் (குணவணி) உடையாய். உலகில் ஐந்து வண்ணங்களே (நிறம்) உள்ளன; உனக்கோ நூறு வண்ணங்கள் உண்டு. உணவுக்குரிய சுவைகள் ஆறே; அவையும் ஊனமுடையன; உனக்குரிய சுவைகளோ ஒன்பது; அவை அழிவற்றன. மானிடர்க்கு வனப்பு ஒன்றே; உனக்குரிய வனப்போ எட்டு.

அரசர்க்குரிய பொருள்கோள்கள் மூன்றே ; உனக்குரிய பொருள் கோள்களோ எட்டு. உலகிலுள்ள சீர்கள் (ஐசுவரியம்) எட்டே ; உனக்குரிய சீரோ முப்பது" எனப் பாராட்டுகிறார்.

எகூ-முதல், தமிழின் பகுதிகளாகிய பாக்கள் பாவினுறுப் புக்கள் சிலவற்றிற்கு வேறு பொருள் தொனிக்கும்படி குறிப்பிட்டு அவ்வாறு கூறுதல் நன்றோவென வினவுவாராய், "சேரமான் அடித்தளையை (விலங்கை) நீக்கிய உன்னடிக்கு ஏழுதளை உண் டென்பதும், செந்தமிழாகிய உன்னை வெண்பாவென்பதும், எல்லாயுகங்களிலும் இருந்து விளங்கிய உன்னைக் கலிப்பாவென் பதும், மருளை மாற்றியருளும் உன்னை மருட்பா வென்பதும், பத் துப் பொருத்தமுடைய உன்னை விருத்தம் (பொருத்த மற்றது) என்று சொல்வதும் முறையோ ?" என்கிறார்.

அரு-முதல் பொருட் செல்வத்தினும் தமிழ் உயர்ந்ததென் பதை விளக்கக்கருதி, "சிந்தாமணி யென்னும் இரத்தினம் உன் பெயரைப் பெற்றதனாலேயே கொடையில் மிக்கதாக விளங்குகின் றது. ஆபரணங்கள் முதலிய அலங்காரங்களெல்லாம் உனக்குள்ள அலங்காரங்களை (அணியிலக்கணங்களை)ப் போலாகுமோ? பொன், உரைத்தாலும் கன்னமிட்டுக் கவர்ந்தாலும் குறையுமே ; நீயோ உரைத்தாலும் அரசர்கள் கன்னமிட்டு (செவியில் ஏற்று)க் கவர்ந் தாலும் குறையாமல் வளருவாய்" என்கிறார்.

கூக-முதல் தெய்வங்கள் தமிழினிடத்து ஆர்வமுடையனவென் பதை விளக்குவாராய், சிவபெருமான் சங்கத்திருந்தது, அகப் பொருளிலக்கணம் இயற்றியது, கலைமகள் புத்தகத்தைக் கையில் ஏந்தியிருப்பது, திருமால் காஞ்சியில் ஒரு தமிழ்ப்புலவரைத் தொடர்ந்து சென்றது, முருகவேள் தமிழை அகத்தியமுனிவ ருக்கு அறிவுறுத்தியது முதலியவற்றை எடுத்துக் காட்டுகிறார்.

கூகூ-முதல், "இவ்வளவு பெருந்தகைமையுடையயாதலால், என் செய்தி நீ கண்டு இரங்குவது நீதி யன்றோ?" என இரந்தும், "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத்தகவென்ற சொற்குள்ளே, எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற வல்லா யாகிய உனக்கு யானோ அறிவுறுத்த வல்லேன்? ஸ்ரீ தியாகராசப் பெருமானையே ஆரூரில் தூது சொல்லப்போக்கினை யென்பதை நன்றாக அறிந்திருந்தும் எனது ஆற்றாமையினாலே தூது சொல்லி வாவென்பேன்" என்று தலைவி தன் உள்ளக் கிடக்கையை வெளி யிடத் துணிவதைக் குறிப்பிக்கின்றார்.

௧௦௨-முதலியவற்றில், " தமிழே ! ஆண்பனையைப் பெண்பனையாக ஆக்கியும், காரைக்காலம்மையாரும் ஔவையாருமாகத் தோன்றியும், திலதவதியாருடன் அவதரித்தும், மங்கையர்க்கரசியாருக்கு ஆசிரியராக எழுந்தருளியும், இசைஞானியார்க்கு மகவாகத் தோன்றிச் சிங்கடியார்க்கும் வனப்பகையார்க்கும் தந்தையாக விளங்கியும் நீ பெண்களெலாம் வாழப் பிறந்தமையால் என் மனத்திற் புண்களெலாம் மாறப் புரிகண்டாய்" என்று தலைவி வேண்டுவதாகக் கூறுகின்றார்.

௧௦௭-முதல், " தூதுவிடற்குரிய பொருள்களாகிய அன்னம், வண்டு, மான், குயில், மனம் முதலியன இன்ன இன்ன காரணங்களாற் போதற்குரியனவல்ல; ஆகையினால் அவற்றைத் தூதுவிடுக்கத் துணிந்திலேனாதலால் உன்னுடனே துணிந்து கூறுவேன்" என்று சொல்லத் தொடங்கி, ௧௧௩-ஆவது முதல், எத்தனையோ தொடைகளையுடைய நீ ஒரு தொடை வாங்கி வந்து உதவும் ஆற்றலுடையாயல்லையோவென்று தலைவி தன்னுடைய நோக்கத்தைக் குறிப்பிப்பதாகக் கூறுகின்றார்.

௧௧௫-முதலியவற்றில், சோமசுந்தரக்கடவுளுக்கும் தமிழுக்கும் உள்ள சம்பந்தத்தை எடுத்துக்காட்டுவாராய் அவர்செய்த திருவிளையாடல்களாகிய தருமிக்குப் பொற்கிழியளித்தது, நக்கீரரோடு வாதம் புரிந்தது, பாணபத்திரருக்குத் திருமுகங்கொடுத்தது, அகப்பொருளிலக்கண நூலியற்றியது, இடைக்காடனார்க்குப் பின்னே வடமதுரைக்கு எழுந்தருளியது, காரியார் நாரியார்க்குப் பாப்பகுந்தளித்தது, விறகு விற்றது, இசைவாது வென்றது முதலியவற்றைக் கூறி, " இந்நிகழ்ச்சிகளால் தென்மதுரைக்குளிருந்த சொக்கர் உனக்கு வயமானவரன்றோ?" என வினவி, ௧௨௪-முதல், " வேதத்தோடு ஒத்த பெருமையை யுடையாய் நீ" என்று பலவகையால் தமிழின் மேம்பாட்டைத் தெரிவிக்கின்றார்.

பின்பு சோமசுந்தரக்கடவுளுடைய பெருமைகள் கூறப்படுகின்றன.

௧௩௪-முதல், திருவாலவாய், மதுரை, சீவன்முத்திபுரம், கடம்பவனமென்னும் மதுரையின் திருநாமங்களையும் சோமசுந்தரக்கடவுளையும் பாராட்டி, ௧௪௦-முதல், பூசலார் சமைத்தகோயில், கண்ணப்பர் உமிழ்ந்த திருமஞ்சனம், திருக்குறிப்புத்தொண்டர் அளித்த பரிவட்டம், மானக்கஞ்சாறனார் சாத்திய பஞ்சவடி,

மூர்த்தியார் சேர்த்த சந்தனம், இளையான்குடிமாறர் படைத்த அமுது, சிறுத்தொண்டர் இட்ட பிள்ளைக்கறி, அரிவாட்டாய நாயனர் தந்த மாவடு, கணம்புல்லர் ஏற்றிய தீபம் முதலிய செயற்கருஞ்செயல்களால் நாயன்மார்கள் சிவபெருமானுக்கு அமைத்த பூசைக்குரிய பொருள்களைத் தொகுத்துக்கூறி, அவை ஆரால் அமைத்தல் கூடுமென வியந்து, அங்ஙனம் செய்தல் தன்னால் இயலுவதன்றென்ற தலைவியின் கருத்தைப் புலப்படுத்துகின்றார்.

கஙக-முதல், "இருந்தமிழே யுன்னா லிருந்தே னிமையோர், விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்" எனத் தமிழால் தான் வாழ்ந்திருத்தலைத் குறிப்பித்துத் தலைவி, தன்னுடைய வருத்தங்களைச் சொல்லி, "திருக்கொள்ளம்பூதூர் வெள்ளத்தைக் கடந்த நீ உன்னை வழிபட்டொழுகும் யான் காமவெள்ளத்தைக் கடக்குமாறு செய்ய வேண்டாவோ? சைனர்களைக் கழுவேறச் செய்த நீ மன்மதனை அவ்வாறு செய்யாயோ? பாண்டியனுடைய கூனை ஒழித்த நீ கரும்பு வில்லின் கூனைநீக்காயோ? அப்பாண்டியனுக்கு வெப்புநோயைத் தீர்த்த நீ என் காமவெப்பத்தைத் தீராயோ? சைனரிட்ட நஞ்சை அமுதாக்கின நீ எனக்குத் தரப்படும் உணவாகிய நஞ்சை அமுதாக்காயோ? தீயிலிருந்தும் வேவாதிருந்த நீ என்னைக் காமத்தீச் சுடாமற் செய்யாயோ? திருச்செங்கோட்டிற் பனி வருத்தாமற் காத்தாய்; என்னைப் பனி வருத்தலைத் தவிர்க்கமாட்டாயோ? வாகீசரைக் கடலில் அழுந்தாதபடி பாதுகாத்தாய்; என்னை அக்கடல் வருத்தாமற் செய்யாயோ? திருவோத்தூரிற் பனையின் வடிவத்தை மாற்றிய நீ அப்பனையில் வாழும் அன்றிலை வேறொரு பறவையாக ஆக்காயோ? பொதியின் மலையிற் சந்தனத் தோடும் தென்றலோடும் நட்புற்று வீற்றிருக்கும் நீ அவையிரண்டையும் எனக்கு உறவாக்காயோ? முத்துச்சிவிகை முதலியவற்றைத் திருவரத்துறையிற் பெற்ற நீ நான் அணியுங்கால் அம்முத்துக்கள் சுடாதிருக்கச் செய்யாயோ? இறந்தவள் எலும்பைப் பூம்பாவை யாக்கினாய்; பொலிவிழந்த என்னையும் அழகுடையேனாகச் செய்யாயோ?" எனக் கூறுமுகத்தாற் சமயாசாரியர் மூவருடைய அரும்பெருஞ்செயல்களை எடுத்துப் பாராட்டுகின்றார்.

கஎ0-முதல், திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி நாயனார், நக்கீரர் முதலியவர்களாக விளங்கிச் சிவபெருமானுடைய அருள் பெற்றதும், காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்திநாயனார்,

சேரமான் பெருமாணுயனாரைக் கைலை சென்றதுமாகிய அரிய செயல்களை விளக்கி, "உன்கையி லாகாத தொன்றுண்டோ?" என்கிறார்.

பின்பு தூதுசெல்லற்குரிய வழி, முறை முதலியவற்றைச் சொல்லத் தொடங்குகின்றார்.

தூதுசெல்லும்பொழுது இடையூறுகளை மாற்றுதற்கும் உதவிகள் பெறுதற்கும் தமிழ் வல்லதென்பதை மூவர் பெருஞ்செயல்கள் வாயிலாக விளக்க எண்ணி, "தமிழே, 'வேயுறுதோளி' என்னும் பதிகத்தை ஓதிச்சென்றாற் செல்லுங்காரியம் சித்திக்குமே. நீ திருவையாற்றிற் காவிரிநதியை வழிவிடச் செய்தாயன்றோ? அன்றியும் பாலை நிலத்தை நெய்தலாகச் செய்தாய். சிவபெருமானே உனக்கு வழியிளைப்பு நீக்கப் பொதிசோறு கொண்டு வந்தாரே!" என்று சொல்லிவிட்டு, "கற்றும் பொருள் காணுதவர், கற்றவர்களை மதியாதவர், முறையறிந்து படியாதவர், பேதையருக்கு அறிவுறுத்துபவர், அவையஞ்சுபவர் முதலியவர்கள்பால் ஏகாதே" என்றும், "பொருள் வேண்டுமெனின் அஃது உனக்கு அரியதன்றே? கேடில் விழுச்செல்வ மென்றே நீ பாராட்டப் பட்டிருக்கின்றாயன்றோ? அஃதன்றித் திருவாவடுதுறையிற் பொற்கிழி பெற்றாய். திருப்புகலூரிற் செங்கல்லைப் பொன்னாக்கினை. பட்டினப்பாலையெனும் வஞ்சிநெடும்பாட்டாற் பதினாறுகோடி பொன் பெற்றாய். நல்லார் வறுமையினும் கல்லாதார் செல்வம் இன்னாதன்றோ?" என்றும், "அன்பிலா ரிந்திரன்போல் வாழ்ந்தாலும் போகாதே; அங்கே புசியாதே" என்றும் அறிவுறுத்துகின்றார்.

பின், மதுரைசென்று செய்யவேண்டியவற்றைச் சொல்லத் தொடங்கி, "வையையில் நீராடி அகழியையும் மதிலையும் கடந்து வீதிகளைச் சூழ்வந்து திருக்கோயிலுட் புகுந்து வணங்கிப் பின் அபிடேகமுனி செய்வித்த தளவரிசையையும், கோபுரம் மண்டபம் மாளிகைப்பத்தி முதலியவற்றையும் கண்டுகளித்துச்சோமசுந்தரக் கடவுள் அங்கயற்கணம்மையோடும் வீற்றிருக்கும் திருவோலக்கத்தை அடைவாய்" என்று ஆற்றுப்படுத்துகின்றார்.

உகக-முதல், "அங்ஙனம் சென்று இடைக்காடன் பின் போன சோமசுந்தரக் கடவுளின் திருவடிகளும், ஒரு பாண்டியனுக்காக மாறித்திருப்பிய திருத்துடையும், தம் அன்பனுடைய விரோதியாகிய பணிக்கனோடு போர்செய்தற்குக் கச்சுக்கட்டிய

திரு இடையும், வந்திதரும் பிட்டுண்டு பசிதீர்ந்த திருவுதரமும், பன்றிக் குட்டிகளுக்குப் பாலருத்திய திருமார்பும், ஒரு வழுதிக்காக மாணிக்கம் விற்ற திருக்கரங்களும், பாண்டிய அரசராகி வேம்பணிந்த திருப்புயமும், கரிக்குருவிக்கு உபதேசித்த திருவாயும், நீ (தமிழ்) வாழும்படி தந்த திருச்செவியும், மாமனாக வந்து வழக்குரைக்கையில் வணிகப் பெண்ணைத் தழுவிக் கண்ணீர் விட்டுத் துயராற்றிய திருவிழிகளும், மண்சுமந்த திருமுடியும் கண்டு களிகூர்ந்து கசிந்து கசிந்துள்ளுருகுவாயாக" என்று சோமசுந்தரக் கடவுளுடைய பாதாதிகேச வருணனை கூறுகின்றார். இந்தப் பகுதி அன்புடையார்க்குத் தெவிட்டாத அமுதமேயாகும். இப் பகுதியால், தெய்வங்களைப் பாதாதிகேசமாகவும் மானிடரைக் கேசாதிபாதமாகவும் வருணிக்கவேண்டுமென்னும் விதிமுறையை ஆசிரியர் அறிந்தவரென்று தெரிகின்றது.

பின்பு, பூசாகாலங்களில் நிகழும் சிறப்புக்களை விரித்துரைக்கின்றார்.

உ-ம்-முதல், அடுக்குத்தீபம், தங்கத்தீபம், முத்தத்தீபம், ரிஷபதீபம், புருடாமிருகதீபம், தட்டம், அட்சாரத்தி, கும்பதீபம், கற்பூரதீபம் ஆகிய தீபங்களும், கண்ணடி, குடை, சாமரை, ஆலவட்டம், விசிறி முதலிய உபசாரப் பொருள்களும் கூறப்படுகின்றன.

இப்பகுதியில், ஒவ்வொரு பொருளும் அங்கே வருதற்கு ஒவ்வொரு காரணம் கற்பித்துக் கூறப்படுகின்றது.

பின்பு, தரிசனகாலத்திற் சென்று உரிய பொருள்களைச் சேர்ப்பித்துத் தரிசனஞ்செய்து தோத்திரஞ் செய்யுமாறு உரைத்தபின் தலைவி தன் துயரைத் தீர்த்தருளும் வண்ணம் முறையிடும்படி கூறுவதாகச் சோமசுந்தரக் கடவுள் திருவிளையாடல்களைப் பலவகையாக அமைத்துக் காட்டுகின்றார். அம்முறையீடு, "ஸ்வாமீ, பழிக்கஞ்சி யென்னும் பெயர் உமக்கு இனி வேண்டாவோ? வந்தவர்கள்மேற் பொடிபோட்டு மயக்கினுற் சொக்கலிங்கமென்னும் பெயர் வேறு பொருள்படுமே. கங்கையைச் சிறு திவலையாக அடக்கிய நீர் அவ்வெள்ளம் இவள் கண்ணூடு வருமாறு செய்வீராயின் உம்மை எல்லாம் வல்ல சித்தரென்று அழைக்கத் துணிவாரோ? இவளுடைய வளையைக்கவர்ந்த நீர் பிறமங்கையர்க்கு வளைவிற்றது முறையோ? உம்முடைய தோள்மாலை

வேம்பென்றால் உம்மைத் தொடர்ந்து அம்மாலையை விரும்பின பெண்களும் உமக்கு வேம்பாகி விட்டார்களோ? மன்மதனை எரித்த உமக்குப் பெண்கள் கலைகளைக் கவருதலும் இயல்போ? அவ்வியல்பைக் கண்ணனிடமிருந்து கற்றுக் கொண்டீரோ? விருத்த குமாரபாலராகக் கௌரிவீட்டிலும், எல்லாம் வல்ல சித்தராகப் பொன்னனையாள் மாளிகையிலும் இருந்த நீர் இவள் வீட்டில் எழுந்தருளி இருக்கலாகாதோ?" என்பது.

பின், "இந்த மொழி யெல்லாந் திருச்செவியில் ஏறும்படி உரைக்க உன்போல் எவர்க்கு வாய்க்கும்?" எனத் தமிழைப் புகழ்ந்து, "சொக்கநாதக் கடவுள் நின் சொற்படியே வந்து எனக்கு மகிழ்வையளிக்கும் வண்ணம் நீ சென்று தூதுசொல்லி வருவாயாக" என்று பூர்த்தி செய்கிறார்.

இத்தகைய அரிய நூலுள்ளே, பெரும்பாலும் நாயன்மார்களுடைய செயல்களும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களும் பலவகையில் அழகுபெற அமைக்கப் பெற்றிருக்கின்றன. இடையிடையே காணப்படும் சிலேடை தொனி திரிபு முதலிய சொன்னயங்களும், பொருணயங்களும் அறிந்து இன்புறற்பாலன.

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்பதற்கிணங்க ஆசிரியர் பல ஆன்றோர் சொல்லிப் போந்த கருத்துக்களை இடமறிந்து எடுத்தாண்டிருப்பதன்றி மொழிகளையும் முழுச்செய்யுட்களையும் இடையிடையே விளங்க அமைத்திருக்கின்றார். அவற்றுள், திருக்குறட் பாக்களைப் பல இடங்களில் நயம்பட அமைத்திருத்தல் அறியத் தக்கது.

இவர், தாம் எடுத்தாண்ட திருவிளையாடற்செய்திகளுக்குத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தைப் பெரும்பாலும் மேற்கோளாகக் கொண்டவரென்று தோற்றுகின்றமையால் அந்நூலாசிரியர் காலத்திற்கு இந்நூலாசிரியர் காலம் பிற்பட்டதென்று தெரிகிறது.

இதனுட் பயின்றுள்ள கருத்துக்களினால் ஆசிரியர் கற்றடங்கினவரென்பதும், கல்லாதவரையும் தமிழருமையறியாதவரையும் மதியாதவரென்பதும், பலசெல்வரிடத்திற்சென்றுசென்று அவர்களுடைய ஆதரவுதேட முயன்று பயனொன்றுங் காணாராகி, "உன் பற்றொழிய வொருபற்று மில்லை யுடையவனே" என்று சிவபெரு

மானைப் பற்றுவதே பெரும்பற்றாக எண்ணிக் காலங்கழித்து வாழ்ந்து வந்தவரென்பதும் விளங்குகின்றன.

பிற தூதுநூல்களிற் பெரும்பாலும், தலைவன் பவனிபோதுங் கால் தலைவி கண்டு காமுற்றுப் பின் தூதுவிடத்துணிந்ததாகக் கூறப்படும் செய்திகளையும் பிறவற்றையும் இவர் மேற்கொள்ளாமல் அவற்றை உய்த்துணர வைத்திருத்தல் தமிழையும் சிவபெருமானையும் பாராட்டுதலையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தாரென்பதைப்புலப்படுத்துகின்றது; எனினும் பிற பாஷைகளையேனும் பிற தெய்வங்களையேனும் பிற சமயங்களையேனும் குறைகூறாது செல்வது இவருடைய பெருந்தகைமையைக் காட்டும். வடமொழி நூல்களைத் தமிழின் உறுதிச்சுற்றமாகக் கூறியதும் வடநூற் கருத்துக்களையும் வடமொழிச் சொற்களையும் தொடர் மொழிகளையும் இடையிடையே அமைத்திருப்பதும் ஆசிரியர் வடமொழி தமிழோடு விரவுதலில் விருப்பமுள்ளவரென்பதைத் தெரிவிக்கின்றன. இந்நூலின் பெருமைகள் இன்னும் பல.

இந்நூலின் மூலப்பிரதி எனக்குக் கிடைத்தது ஒன்றே. நான் கும்பகோணம் காலேஜில் வேலையாக இருந்தபோது மாணவராக இருந்த ம-ா-ா-ஸ்ரீ சாம்பசிவ செட்டியாரவர்கள் (இப்போது மாயூரத்தில் அட்வொகேட்டாக இருப்பவர்கள்) 1900-ஆம் வரு மேமீ 2-ஆம் தேதியில் தாம் சாப்பிடும் விடுதியில் அயலூரா ரொருவர் சில ஏட்டுச்சுவடிகளுடன் வந்திருக்கிறாரென்றும் அவற்றை என்னிடம் சேர்ப்பிக்க எண்ணியிருக்கிறாரென்றும் சொல்லி, அன்று பிற்பகலிலேயே அவற்றையெல்லாம் என்னிடம் சேர்ப்பித்தார்கள். அவற்றுட் பெரும்பாலன அச்சிட்ட நூல்களாகவேயிருந்தன. ஏதோ ஒரு பழஞ்சுவடியின் இறுதியில் இந்தநூல் காணப்பட்டது. ஷை செட்டியாரவர்களுடைய அன்புடைமையும் புத்தகத்தின் சொந்தக்காரருடைய அன்புடைமையும் என் மனத்திற் குடிகொண்டிருக்கின்றன.

பிறகு அந்தச்சுவடியைப் படித்துப்பார்த்துவிட்டுப் பொருள் நயத்தையறிந்து எழுதுவித்தேன். பின் அதைப்பன்முறைபடித்து வேறு பிரதி எங்கேனும் கிடைக்குமோவென்று அக்காலம் தொடங்கி இதுகாறும் பல இடங்களில் தேடிப்பார்த்தும் எங்கும் கிடைக்கவில்லை. ஆதலால் இனித் தாமதிப்பதிற் பயனில்லையென்று நினைத்து இப்போது குறிப்புரையுடன் பதிப்பிக்கலானேன்.

அந்த ஏட்டுச் சுவடியினிறுதியில், "பச்சைமுத்து உபாத்தியர் லிகிதம் சிரணமாயிருந்து கரவருஷம் மாசிமீ" கூ-உ புதவாரமும் சதுர்த்தசியும் கூடிய திருவோண நக்ஷத்திரத்தில் ஷையார் பேரன் சுந்தரேசன் லிகிதம் நிறைவேறிற்று" என்று எழுதப் பட்டுள்ளது.

இந்த நூலால் அறியக்கூடிய செய்திகள்பல இருத்தலால் தமிழ்ச் சுவையை அறிந்து இன்புறும் அன்பர்களுக்கு இது மிகவும் பயன்படுமென்பது எனது கருத்து.

திருப்பனந்தாட் காசி மடாலயத் தலைவர்களும் அருங்கலை விநோதர்களுமாக விளங்கும் கௌரவம் பொருந்திய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத ஸ்வாமிகளவர்கள் தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியைக் குறித்து இக்காலத்துச் செய்துவரும் முயற்சிகள் பலவென்பதை யாவரும் அறிவார். அவர்கள் இந்நூலின் சொற்சுவை பொருட்சுவைகளையும் இது தங்களுடைய வழிபடு தெய்வமாகிய மதுரை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுடைய கருணைத் திறத்தைப் புலப்படுத்திக் கொண்டிருத்தலையும் அறிந்து இன்புற்று இந்நூல் முதன்முறை பதிப்பிக்கப் பெறும்போது யான் சிறிதும் பொருட்கவலை அடையாதபடி உதவிபுரிந்தார்கள். இது விஷயத்தில் அவர்களுக்கு என்மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

"வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று" (நீதிநெறிவிளக்கம்).

என்பது அவர்களுடைய முன்னோர்கள் திருவாக்கன்றோ?

இந்நூலைப் பதிப்பிக்கும்விஷயத்தில் உடனிருந்து ஆராய்தல் ஒப்பு நோக்குதல்முதலிய உதவிகளைச் செய்தவர்கள், சென்னை விமன்ஸ் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் சு. கோதண்டராம ஐயரும், கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், மோகனூர்த் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி கி. வா. ஜகந்நாத ஐயரும் ஆவர்.

திருவேட்டீசுவரன்பேட்டை
16—9—32.

இங்ஙனம்,
உ. வே. சாமிநாதையர்.

## குறிப்புரையில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கும் நூற்பெயர்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

இராச - இராசராச சோழனுலா.
இ - வி - இலக்கண விளக்கம்.
இளம் - இளம்பூரணம்.
இறை - இறையனாரகப் பொருள்.
கம்ப - கம்பராமாயணம்.
கலி - கலித்தொகை.
க - றை - கட்டளைக் கலித்துறை.
குலோத் - உலா - குலோத்துங்க சோழனுலா.
குலோத். பிள்ளை - குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்.
குறள் - திருக்குறள்.
குறுந் - குறுந்தொகை.
சிலப் - சிலப்பதிகாரம்.
சிவரக - சிவரகசியம்.
சீகாளத்திப் - சீகாளத்திப் புராணம்.
சீவக - சீவக சிந்தாமணி.
சூ - சூத்திரம்.
தக்க - தக்கயாகப் பரணி.
தண்டி - தண்டியலங்காரம்.
தமிழ்நா - தமிழ் நாவலர் சரிதை.
தனிப் - தனிப்பாடல்.
திருச்சிற் - திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருஞா - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.
திருநா - திருநாவுக்கரசு நாயனார்.
திருவள்ளுவ - திருவள்ளுவமாலை.
திருவா - திருவாசகம்.
திருவால - திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்.
திருவிளை - திருவிளையாடற் புராணம்.
தே - தேவாரம்.
தொல் - தொல்காப்பியம்.
ந - நச்சினார்க்கினியம்.
நம்பி - நாற்கவிராச நம்பியகப் பொருள்.
நன் - நன்னூல்.
நாலடி - நாலடியார்.
நீதி நெறி - நீதிநெறி விளக்கம்.
நேமி - நேமிநாதம்.
ப - பக்கம்.
பட் - பட்டினப்பாலை.
பிரயோக - பிரயோகவிவேகம்.
புறநா - புறநானூறு.
பெரிய - பெரிய புராணம்.
பெரியவாச் - பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்.
பெருங் - பெருங்கதை.
பேர் - பேராசிரியர் உரை.
மயிலை - மயிலைநாதருரை.
முத்துக். பிள்ளை - முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்.
மேற் - மேற்கோள்.
யா. கா - யாப்பருங்கலக்காரிகை.
யா. வி - யாப்பருங்கல விருத்தி.
வாட்போக்கிக் - வாட்போக்கிக் கலம்பகம்.
விக்கிரம. உலா - விக்கிரம சோழனுலா.
வி - பாரதம் - வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.
வே - வெண்பா.
கக - ஆம் - பதினோராந்திருமுறை

உ

கணபதி துணை.

மதுரைச் சொக்கநாதர்

# தமிழ் விடு தூது.

---

கலி வெண்பா.

க. சீர்கொண்ட கூடற் சிவராச தானிபுரந்
தேர்கொண்ட சங்கத் திருந்தோரும் - போர்கொண்
உ. டிசையுந் தமிழரசென் றேத்தெடுப்பத் திக்கு
விசையஞ் செலுத்திய மின்னும் - நசையுறவே
ங. செய்யசிவ ஞானத் திரளேட்டி லோரேடு
கையி லெடுத்த கணபதியும் - மெய்யருளாற்
ச. கூடல் புரந்தொருகாற் கூடற் புலவரெதிர்
பாடலறி வித்த படைவேளும் - வீடகலா

---

## குறிப்புரை.

க. கூடற்சிவராசதானி - கூடலாகிய சிவராசதானி; சிவராசதானியென்பது மதுரையின் திருநாமங்களுள் ஒன்று; "திருமதுரை தானே சிவராச தானி" என்பர் பின்; உகூ௰ - கூ. புரந்து சங்கத் திருந்தோரென்றது சோமசுந்தரக் கடவுளை.

உ - ங. மின் - தடாதகைப் பிராட்டியார். தாம் உபதேசித்ததைப் பராமுகமாகக் கேட்ட அம்பிகையைச் சிவபெருமான் சபித்தபொழுது சினந்து விநாயகக்கடவுள் கடலில் எறிவதற்கு ஆங்கிருந்த வேதாகமச் சுவடிகளை யெடுத்தனரென்பது வரலாறு; **திருவால.** வலைவீசின; **திருவிளை.** ஷை.

ச. படைவேள் - முருகக்கடவுள். கூடல்புரந்து - மதுரைநகரத்தை ஆண்டு. கூடற்புலவர் - சங்கப்புலவர்; கூடல் - சங்கம்; "கூடலி னாய்ந்த வொண் டீந்தமிழ்" (**திருச்சிற். 20.**) அவர் கூடலைப்புரந்தது உக்கிரபாண்டியராகியும், பாடலறிவித்தது உருத்திரசன்மராகியும்; **திருவால.** உக்கிரன்பிறந்த. ஷை ஊமை தமிழறிந்த.

ரு. மன்னுஞ்சூ வாண்டில் வடகலையுந் தென்கலையும்
அன்னைமுலைப் பாலி னறிந்தோரும் - முன்னரே

சு. மூன்றுவிழி யார்முன் முதலையுண்ட பிள்ளையைப்பின்
ஈன்றுதரச் சொல்லி னிசைத்தோரும் - தோன்றயன்மால்

எ. தேடிமுடி யாவடியைத் தேடாதே நல்லூரிற்
பாடி முடியாப் படைத்தோரும் - நாடிமுடி

அ. மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்த்தெழுதிப்
பட்டோலை கொள்ளப் பகர்ந்தோரும் - முட்டாதே

கூ. ஒல்காப் பெருந்தமிழ்மூன் றோதியருண் மாமுனியும்
தொல்காப் பியமொழிந்த தொன்முனியும் - மல்காச்சொற்

க0 பாத்திரங்கொண் டேபதிபாற் பாய்பசுவைப் பன்னிரண்டு
சூத்திரங்கொண் டேபிணித்த தூயோரும் - நேத்திரமாம்

---

ரு. அறிந்தோர் - திருஞானசம்பந்தர். வடகலையுந்தென்கலையும்... அறிந்தோர்: "முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன்" தே.

சு. இசைத்தோர் - சுந்தரமூர்த்தி நாயனார்.

எ. நல்லூர் - திருநல்லூர். பாடி - திருச்சத்திமுற்றத்தில், "பூவாரடிச்சுவ டென்மேற் பொறித்துவை" என்றுபாடி. பாடி நல்லூரிற் படைத்தோரெனக் கூட்டுக; படைத்தோர் - திருநாவுக்கரசு நாயனார். திருநாவுக்கரசர் நல்லூரில் திருவடியை முடியாகப் பெற்றதற்குஅறிகுறியாக அத்தலத்தில் இன்றும் திருவடிநிலை உள்ளது.

அ. மட்டு - தேனையுடைய. ஓலைப்பூ - தாழம்பூவை. வனையார் - அணியாதவராகிய சிவபெருமான்; ஓலைப்பூ: "வாளாமோ லைப்பூவுமாம்" (இரத்தினச்சுருக்கம்.) வார்ந்து - வாரி. சேர்த்து - புத்தகமாகச் சேர்த்து. பட்டோலை - குறிப்பெழுதும் ஓலை; "பண்ணிய பாவமெங்கள் பட்டோலைக் குட்படுமோ" (சீவக.); "பேராசிரியர் நேமிநாதர் பட்டோலைபிடிக்கப் பாடியது" (தமிழ்நா.) பகர்ந்தோர் - திருவாதவூரர்.

இந்தக்கண்ணி சிவபெருமான் திருக்கோவையாரை எழுதியருளியதைத் தெரிவிக்கின்றது.

கூ. தமிழ்மூன்று ஓதியருள் மாமுனி - அகத்தியர்; "முழுதுணர்ந்தருண் மலயநன்முனி மொழியுமுத்தமிழ்" வி. பாரதம்.

தொன்முனி - தொல்காப்பியமுனிவர்.

க0. தூயோர் - மெய்கண்டதேவர். பா திரம்-செய்யுட்களின் நிலை. பதி - சிவபெருமான். பசு - ஆன்மா. பன்னிரண்டு சூத்திரம் - சிவஞானபோதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்கள். தலைவன்மேற் பாய்கின்ற பசுவைப் பன்னிரண்டு கயிற்றாற்கட்டியவென்பது தொனிப்பொருள்.

கக. நீதில் கவிதைத் திருமா ளிகைத்தேவர்
ஆதி முனிவ ரனைவோரும் - சாதியுறும்

கஉ. தந்திரத்தி னுலொழியாச் சார்வினையைச் சாற்றுதிரு
மந்திரத்தி னுலொழித்த வல்லோரும் - செந்தமிழிற்

கங. பொய்யடிமை யில்லாப் புலவரென்று நாவலர்சொல்
மெய்யடிமைச் சங்கத்து மேலோரும் - ஐயடிகள்

கச. காடவருஞ் செஞ்சொற் கழறிற் றறிவாரும்
பாடவருந் தெய்வமொழிப் பாவலரும் - நாடவரும்

கரு. கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையால் - சொல்லாரும்

கசு. என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் - பன்னியமென்

கஎ. பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகிண்
டெஞ்சியழுக் கேறு வியற்கலையே - விஞ்சுநிறம்

---

கக. கவிதை - செய்யுள்; பரி. கு : 8, உரை. முனிவரென்றது திருவிசைப்பாப் பாடியவர்களை.

கஉ. தந்திரம் - நூல்; சூழ்ச்சியும் செயலுமாம். வல்லோர் - திருமூலர்.

தந்திரமந்திரங்களிரண்டனுள் தந்திரத்தினுலொழியாததனை மந்திரத்தால் ஒழித்தாரென்பது ஒருநயம்.

கங. சங்கத்து மேலோர் - கபிலர் பரணர் நக்கீரர் முதலியோர்; திருத்தொண்டர் திருவந்தாதி, 49.

கங-ச. ஐயடிகள் காடவர் - ஐயடிகள் காடவர்கோன் நாயனர்; இவர் க்ஷேத்திரத் திருவெண்பா இயற்றியவர். கழறிற்றறிவார் - சேரமான்பெருமாணயனர்; இவர் இயற்றியவை பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கைலாய ஞானவுலா. தெய்வமொழிப் பாவலர் - திருவள்ளுவநாயனர்; "திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்" (திருவள்ளுவ.) நாட அரும்.

கரு. நீ யென்றது தமிழை நோக்கி. சொல் - புகழ்.

கசு. என் அடிகளே - என் ஸ்வாமீ! உன் பொன்னடிகள் - உன்னுடைய அழகிய திருவடிகளை, செய்யுளடிகளை; சிலேடை; "எழ்தனையுன், பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ" என்பர் பின்னும்; எக. பன்னிய - சுகிர்ந்த.

கஎ. பஞ்சி - பஞ்சு. நெருடல்: "நாவி லிழைநக்கி நூனெருடு மேழை" (தனிப்.) நூல், பா, கலை : சிலேடை. கலை - நூல்வகை, ஆடை.

கஅ. தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகம்
தீயாது சொல்விளையுஞ் செய்யுளே - வீயா

ககூ. தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் - இருநிலத்துப்

உ0. புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்
கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்

உக. தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்
உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி

---

கஅ. சொல்லேருழவர் - புலவர்; "சொல்லே ருழவர் தொகுத் தீண்டி" (கூசு); "கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை" (குறள். 872.) தீயாது - கரிந்து போகாமல். சொல் - மொழி, நெல். செய்யுள் - பாடல், விளைநிலம்; செய்யாகிய இடம்; "செய்யுள்மிக் கேறுசங்கம்" (பெரிய. மூர்த்தி. 5.) இந்தக் கண்ணிப் பொருளின் விரிவு இந்நூல் கூஉ-ஆம் கண்ணி முதலியவற்றிற் காணப்படும்.

ககூ. வருகுலம் ஐந்தென்றது வெண்பா முதல் மருட்பா ஈறாக உள்ள ஐந்தை. இவை ஐந்தும் ஐந்துகுலங்களாகக் கூறப்படும்; "நால் வகைப் பாவு நால்வகைக் குலத்தின், பால்வகைப் படுமே முதலன விரண் டின், புணர்ச்சி மருட்பாப் பொருந்தா வருணம்" (பன்னிருபாட்டியல், சூ. 166); "வெண்பா முதலா வேதிய ராதியா, மண்பால் வகுத்த வருண மாம்" யா. வி. மேற்.

உ0. உந்திப்புலம் - கொப்பூழிடம். வளி - உதானவாயு. வாக்கு - பரை முதலிய நான்கு.

உக. உரம் - மார்பு. இதழ் - உதடு. தந்தம் - பல். அண்ணத்து - மேல்வாயில். தலைதிரும்பல் - ஒலியெழுத்தின் தோற்றத்திற்கும் சிசுவின் பிறப்பிற்கும் பொதுத்தன்மை; "உந்திமுதலாவெழும்வளி தலைகாறும் சென்று மீண்டு நெஞ்சின்கண் நிலைபெறுதலை யெனக்கொள்க" (தொல். பிறப்பியல், சூ. 20, இளம்.) என்பது இங்கே அறியற்பாலது.

உ0-உக. இவற்றிற் கூறப்படும் கருத்து, "நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப, எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி, மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின், வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே." (நன். சூ. 74), "உந்தியிற் றோன்றி யுதான வளிப்பிறந்து, கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து - வந்தபின், நாசிநா வண்ண மிதழெயிறு மூக் கென்ப, பேசு மெழுத்தின் பிறப்பு" (நேமி. எழுத். வெ. 6) என்பவற் றால் விளங்கும்.

௨௨. ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று
நாற்ப தெழுத்தா னனிபிறந்தாய் - மேற்படவே

௨௩. எண்முதலா கப்பகுப் பீரா றெனும்பருவம்
மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணிபோற்

௨௪. பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்
தள்ளிச் சிறுர்கூடித் தாலாட்டி - உள்ளிலகு

௨௫. மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - மஞ்சரையே

௨௬. பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்
உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ- முன்னே

௨௭. நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்
உனையும் படிப்பிப்பா ருண்டோ - புனைதருநற்

---

௨௨. முதல் முப்பதெழுத்து-முதலெழுத்தாகிய முப்பது; அவை உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும். சார்பிருநூற்றுநாற்பது-சார்பெழுத்து இருநூற்று நாற்பது; அவையாவன: உயிர்மெய் - ௨௧௬, உயிரளபெடை-எ, ஒற்றளபெடை - ௧௧, குற்றியலிகரம் - ௧, குற்றியலுகரம்- ௧, ஆய்தம் - ௧, ஐகாரக்குறுக்கம் - ௧, ஔகாரக்குறுக்கம் - ௧, மகரக் குறுக்கம் - ௧; ஆக - ௨௪0; இ. வி. சூ. 5.

௨௩. எண் முதலிய ஈராறுவன எழுத்திலக்கணத்தின் பகுதிகளாகிய எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இடைநிலை, ஈற்றுநிலை, போலி, பதம், புணர்ச்சியென்பவை; நன். சூ. 57.

௨௪. அசை - சுவடித்தூக்குப்பலகை. அசை தொட்டிலாக உருவகம் செய்யப்பட்டது. தாலாட்டி - நாவையசைத்து; தாலாட்டுதலென்னும் இசைப்பாட்டைப் பாடியென்றுமாம்.

௨௫. மஞ்சட் குளிப்பாட்டல், மையிடல், முப்பாலைப்புகட்டல் சுவடிக்கும் குழந்தைக்கும் பொது. படிக்கத் தொடங்குகையில் எழுதிய ஏட்டில் மஞ்சட்பூசுதலும் பின்பு எழுத்துவிளங்க மைக்காப்புச் சாத்துதலும் பண்டைக்கால வழக்கம்; திருவிளை. பரிநரியாக்கி. 9. முப்பால் - குழந்தைக்குத் தாய்ப்பால், பசுவின்பால், ஆட்டின் பால்; தமிழுக்கு அறம் பொருள் இன்பம். மஞ்சர் - மைந்தர்.

௨௫-௨௬. மஞ்சரைப் பத்துப் பருவமிட்டு நீ வளர்த்தாயென்றது பிள்ளைத்தமிழென்னும் பிரபந்தத்திலுள்ள காப்புப்பருவமுதலிய பத்துப் பருவங்களைக்கருதி.

உஅ. செய்யுட்சொ னான்குமுயர் செந்தமிழ்ச்சொ னாலேர்நான்
மெய்யுட் பொருளேழ் விதத்திணையும் - மையிலெழுத் [கும்

உகூ. தாதியாப் பெட்டு மலங்கார மேழைந்தும்
பேதியாப் பேறெழின்மாப் பிள்ளையாய்ச் - சாதியிலே

௩0. ஆங்கமைசெப் பற்பண் ணகவற்பண் டுள்ளற்பண்
தூங்கற்பண் பட்டத்துத் தோகையரா - ஓங்குமனத்

௩க. தெண்கருவி யைந்தின் றிடுநூற்று மூன்றான
பண்களும்பின் கல்யாணப் பாவையரா - எண்கொளும்

௩உ. நற்று ரகமா நவரசமாம் பிள்ளைகளைப்
பெற்றாய் பெருவாழ்வு பெற்றாயே - உற்றகலாப்

---

உஅ. செய்யுட்சொல் நான்கு - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்; "இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென், றனைத்தே செய்யுளீ ணட்டச் சொல்லே" (தொல். எச்ச. சூ. 1.) செந்தமிழ்ச்சொல் நான்கு - பெயர், வினை, இடை, உரி. பொருளேழ்விதத்திணை - அகத்திணை ஏழு; புறத்திணை ஏழு; அவற்றுள் அகத்திணை ஏழாவன: கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை; புறத்திணையேழாவன: வெட்சி, காந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பையென்பன; பு. வே. பிற கூறுவாருமுளர்.

உஅ-கூ. எழுத்தாதி யாப்பு எட்டு - எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, பாவினமென்பன; (யா. கா.) அலங்காரமேழைந்து - தன்மையணி முதற் பாவிகமிறுதியாகிய பொருளணிகள் முப்பத்தைந்து (தண்டி. சூ. 26.) மாப்பிள்ளை - மணமகன்; என்றது தமிழ்மொழியை; "செந்திற் குறத்திக்கு மாப்பிள்ளையே" (தனிப்.) சாதியில் - வெண்பா முதலிய நான்கு சாதியில்.

௩0. பண் - ஓசை. செப்பற்பண் முதலியன முறையே வெண்பா முதலிய நான்கிற்கும் உரியவை.

௩க. கருவி ஐந்து - தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக் கருவி, மிடற்றுக்கருவி. நூற்றுமூன்றுபண்: சிலப்பதிகாரம், 65, 68, 110, 112, 234 - ஆம் பக்கங்களிற் கண்டுகொள்க. பின் கல்யாணப் பாவையர் - பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தியர்; இவர் மன்றற் புணர்ச்சிக் குரியோர் (நம்பி. சூ. 61); "பாடுமிசை யெல்லாமுன் பாவையராச் சேர்ந்தாய்" என்பர் பின்; கக௬.

௩உ. தாரகம் - ஆதாரம்; நவரசம்: வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம்; இவற்றின் இலக்கணங்களைச் சிலப்பதிகாரம் முதலியவற்றிற் கண்டுகொள்க.

௩௩. பண்கள்முதற் பெண்களொடும் பாலரொடு நாடகமாம்
பெண்கொலுவில் வீற்றிருக்கப் பெற்றாயே - மண்புகழத்

௩௪. தாழ்விலா வட்டா தசவன் னனைகளெனும்
வாழ்வெலாங் கண்டு மகிழ்ந்தாயே - ஆழ

௩௫. நெடுங்கோலை வையையிலென் னேசர்மேற் பட்ட
கொடுங்கோல்செங் கோலாகக் கொண்டாய் - அடங்காத

௩௬. எங்கோவே பத்தென் றியம்புதிசைக் குள்ளேநின்
செங்கோல் செலாத திசையுண்டோ - இங்கேயுன்

௩௭. தேசமைம்பத் தாறிற் றிசைச்சொற் பதினேழும்
மாசறநீ வைத்தகுறு மன்னியரோ - வீசு

௩௮. குடகடலுங் கீழ்கடலுங் கோக்குமரி யாறும்
வடவரையு மெல்லை வகுத்தாய் - இடையிருந்த

---

௩௩. பெண்கள் - மனைவியர். பாலரென்றது நவரசங்களை. நாடகமாம் பெண் - நாடகமாகிய மனைவி. நாடகத்திற்கு அரங்கு இன்றியமையாததாதலாற் கொலு இங்கே கூறப்பட்டது.

௩௪. அட்டாதச வன்னனைகள் - பெருங்காப்பியத்திற்குரிய பதினெட்டு வருணனைகள்; அவையாவன: மலை, கடல், நாடு, நகர், சிறுபொழுது - ௬, பெரும்பொழுது - ௬, சூரியோதயம், சந்திரோதயமென்பவற்றின் வருணனைகள்; "மலை கடனாடு வளநகர் பருவம், இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து" (தண்டி. சூ. ௭.); "மலைகடனாடு முதலிய பதினெட்டு வருணனையும் ஒழிந்தனவுங் குறைவின்றி யுணர்த்தப் படுவனவாகும் பெருங்காப்பியம்" (மாறனலங்காரம், சூ. 101, உரை); "எண்ணிய வன்னனைக ளீரொன் பதுமறியக், கண்ணிய மிக்கபெருங் காப்பியமும்" என்பர் பின்; ௫௩.

௩௫. என்னென்றது தலைவியைச் சுட்டிநின்றது. சோமசுந்தரக் கடவுளை ஈண்டு நேசரென்றாற்போல, "பேதியா நேசர்", "அன்பர்" என்று பின்னுங் கூறுவர்; ௯௫, ௧௨௮. கொடுங்கோலென்றது பாண்டியன் அடித்த பிரம்பை.

௩௭. திசைச்சொல் பதினேழு - தமிழொழிந்த பதினேழு பாஷைகள்; (நன். மயிலை. ப. 161.) குறுமன்னியர் - சிற்றரசர்கள்.

௩௮. குடகடல் - மேல்கடல். வடவரை - திருவேங்கடம்; "வடவேங்கடந் தென்குமரி யாயிடைத், தமிழ்கூறு நல்லுலகத்து" (தொல். சிறப்பு.) என்பதும், 'கிழக்கும் மேற்கும் கடலெல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினர்" (ந.) என்ற அதன் விசேடவுரையும், "குமரி வேங்கடங் குணகுட கடலா, மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்" (சிலப். நூற்கட்டுரை) என்பதும் இங்கே கூறப்பட்ட எல்லைக்கு ஆதாரமென்று தோற்றுகிறது.

௩௯. மூன்னூறுந்தென் பாண்டி முதற்புனனு டீருன
பன்னிரண்டு நாடுமப் பானுடோ - அந்நாட்டுள்

௪௦. வையை கருவைமரு தாறுமரு வூர்நடுவே
ஐயநீ வாழு மரண்மனையோ - செய்யபுகழ்

௪௧. மூவேந்தர் வாகனமா மூவுலகும் போய்வளைந்த
பாவேந்தே நீபெரிய பார்வேந்தோ - காவேந்து

௪௨. விண்ணவருங் காணரிய வேதா கமங்களெலாம்
புண்ணியனே யுன்றன் புரோகிதரோ - எண்ணரிய

௪௩. நல்லபெருங் காப்பியங்க ளுடகா லங்காரம்
சொல்லரசே யுன்னுடைய தோழரோ - தொல்லுலகிற்

௪௪. சார்புரக்குங் கோவேநற் சாத்திரங்க ளெல்லாமுன்
பார்புரக்குஞ் சேனு பதிகளோ - வீரதிர்

௩௯. தென்பாண்டி முதற் புனல்நாடு ஈருன பன்னிரண்டு நாடுகளின் பெயர்களை, "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி, பன்றி யருவா வதன்வடக்கு - நன்ருய, சீத மலாடு புனனுடு செந்தமிழ்சே, ரேதமில் சீர்ப் பன்னிருநாட் டெண்" (நன். மயிலை. சூ. 272, மேற்.) என்பதனுலறிக.

௪௦. வையை - வையையாறு. கருவை - கருவூர். இங்கே கூறப்பட்ட எல்லை செந்தமிழ் நாட்டெல்லை. நடுவென்றது, வையையாற்றின் வடக்கும் கருவூரின் கிழக்கும் மருதயாற்றின் தெற்கும் மருவூரின் மேற்குமாகிய நாட்டை. இவ்வெல்லை, "அவற்றுள், இயற்சொற்றுமே" என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு இளம்பூரணர் முதலியோர் எழுதிய உரையால் அறியப்படும்.

௪௧. மூவேந்தர் மூவுலகும் சென்றபொழுது அவர்களுடன் தமிழும் சென்றதென்பது இங்கே அறிதற்பாலது. ஒரு சோழன் பாதலத்திற் சென்று நாககன்னிகையை மணந்ததும், முசுகுந்தன் (சோழர்களிலொருவனென்பர்) அசுரரைவென்று தேவர்களைப் பாதுகாத்ததும், நிலந்தரு திருவிற் பாண்டியன் தேவாசுரர் கலகத்தைத் தீர்த்ததும் (இறை. சூ. 35, உரை), சேரர்களிற் சிலர் வானளவும் ஆணை செலுத்தி வானவரம்பரென்னும் பெயர் பெற்றதும், பிறவும் மூவுலகும் போய் வளைந்ததைப் புலப்படுத்தும்.

௪௩. நல்ல பெருங்காப்பியங்களென்றது இராமாயண முதலிய வடமொழிக் காவ்யங்களை.

நாடகாலங்காரமென்றது வடமொழி நாடகநூல்களையும், அலங்கார நூல்களையும்.

௪௪. சார் - சார்ந்தவர்களை; சார்ந்தவற்றை. சாத்திரங்களென்றது சமய நூல்கள் முதலியவற்றை.

சரு. போர்ப்பா ரதமும் புராணம் பதினெட்டும்
சீர்ப்பாவே யுன்னுடைய சேனைகளோ - பார்ப்பார்கள்

சசு. அக்கர வர்த்தியென லாமென்பார் பூலோக
சக்கர வர்த்தியுநீ தானன்றோ - சக்கரமுன்

சஎ. பேந்தி நெடுந்தேர்மே லேறிச் சுழிகுளம்
நீந்தியோர் கூட நிறைசதுக்கம் - போந்து

சஅ. மதுரங் கமழ்மாலை மாற்றணிந்து சூழுஞ்
சதுரங்க சேனை தயங்கச் - சதுராய்

சகூ. முரசங் கறங்க முடிவேந்தர் சூழ
வரசங்க மீதிருந்து வாழ்ந்தே - அருள்வடிவாய்

ருo. ஓங்குபுகழ் மூவ ரொருபா வொருபஃதும்
ஆங்கவைசொல் வாதவூ ராளிசொல்லும் - ஓங்குமவன்

---

சசு. அக்கரவர்த்தி - எழுத்துவருத்தன மென்னும் சொல்லணி. சக்கரம் - நான்காரைச்சக்கரம், ஆறுரைச்சக்கரம், எட்டாரைச்சக்கர முதலிய சொல்லணிகள் ; சக்கரப்படையென்பது மற்றொரு பொருள்.

சஎ. தேர் - இரதபந்தமென்னும் சொல்லணி, ஊர்தியாகிய இரதம். சுழிகுளம் - ஒரு சொல்லணி, சுழித்தகுளமென்பது மற்றொரு பொருள். கூடநிறை சதுக்கம் - கூடசதுக்கமென்னும் சொல்லணி, கூடங்கள் நிறைந்த நாற்றெருக்கள் கூடுமிடம்.

சஅ. மதுரம் - சுவை. மாலைமாற்று - ஒரு சொல்லணி, வேறுபட்ட பூமாலைகள். சதுரங்கம் - சதுரங்கபந்தமென்னும் சொல்லணி, ரத கச துரகபதாதிகள்.

சகூ. முரசம் - முரசபந்தமென்னும் சொல்லணி, பேரிகை. சூழ - சுற்றிவர, ஆலோசனை செய்ய. வர சங்கம் - மேன்மையான சங்கப் பலகை, அறிஞர் கூட்டம்.

சசு-சகூ. இவற்றில், தமிழுக்குரிய சொல்லணிகள் அரசனுக்குரிய அங்கங்களாகக் கூறப்பட்டுள்ளன.

ருo. மூவர் - திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய மூவர். ஒருபா ஒருபஃது - பதிகங்கள் ; என்றது தேவாரத்தை. ஆங்கவை யென்றது பதிகங்களை ; என்றது திருவாசகப்பதிகங்களை. வாதவூராளி சொல் - திருவாசகம்.

ருo-ருக. அவன் கூற்றாய் - திருவாதவூரடிகளது திருவாக்காகி,

௫க. கூற்றுா யரனெழுதுங் கோவையுங் கோதிருய்
மாற்று விரட்டைமணி மாலையும் - தேற்றமுறப்

௫௨. பற்று மிலக்கணநூற் பாவுநூற் பாவறிந்து
கற்றோர் வழங்குபஞ்ச காப்பியமும் - கொற்றவருக்

௫௩. கெண்ணிய வன்னனைக ளீரொன் பதுமறியக்
கண்ணிய மிக்கபெருங் காப்பியமும் - நண்ணியே

௫௪. இன்புறு சேரனரங் கேற்றமகிழ்ந் தம்பலத்தான்
அன்புறுபொன் வண்ணத்தந் தாதியும் - முன்பவர்சொல்

௫௫. மாத்தமிழா மும்மணி மாலையும் பட்டினத்தார்
சோத்தணிந்த மும்மணிக் கோவையும் - மூத்தோர்கள்

௫௬. பாடி யருள்பத்துப் பாட்டுமெட் டுத்தொகையுங்
கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக்கும் - ஆடகமா

---

௫க. கோவை - திருச்சிற்றம்பலக்கோவையார். தாய் - காரைக் காலம்மையார். இரட்டைமணிமாலை - பதினோரந் திருமுறையிலுள்ள **திருவிரட்டை மணிமாலை.**

௫௨. நூற்பா - சூத்திரம். பஞ்சகாப்பியம் - சீவக சிந்தாமணி முதலிய ஐந்து நூல்கள்.

௫௩. கண்ணியம் - பெருமை; "கண்ணிய மந்திரக் கருமங் காவல" (கம்ப. யுத்த. மந்திர. ௩௪.) பெருங்காப்பியமென்றது **சூளா மணி,** கம்ப ராமாயண முதலியவற்றை. நண்ணி - தில்லையை யடைந்து.

௫௪. சேரன் - சேரமான்பெருமாணாயனார்.

௫௫. மும்மணிமாலை - **திருவாரூர் மும்மணிக்கோவை.** பிரதியில் நான்மணிமாலை யென்று காணப்பட்டது. அதனை எழுதுவோருடைய தவறென்று கருதி, இங்கே இவ்வாறு கொள்ளலானேன்; சேரமான் பெருமாணாயனார் இயற்றியதாகக் கருதப்பட்ட நான்மணிமாலை யொன்று இருந்து இறந்தது போலுமென்னும் ஐயத்தால் இங்கே கொடுக்கலாயிற்று. பட்டினத்தார் - பட்டினத்துப்பிள்ளையார். மும்மணிக்கோவை - **திருவிடைமருதூர் மும்மணிக்கோவை** முதலியன; **திருமும்மணிக்கோவை** யெனவும் பழையவுரைகளில் வழங்கும். மூத்தோர்கள் - நக்கீரர் முதலிய சான்றோர்களாகிய சங்கப்புலவர்கள்.

௫௬. பத்துப்பாட்டு - **திருமுருகாற்றுப்படை** முதலியன. எட்டுத்தொகை - **நற்றிணை** முதலியன. பதினெட்டுக் கீழ்க்கணக்கு - **நாலடியார்** முதலியன.

௫௬-எ. ஆடகமா வெற்பு - மேரு மலை,

௫எ. வெற்பனையார் மாதை விமலரிடத் தேயிருவர்
கற்பனையாற் சொன்ன கலம்பகமும் - முற்படையோ

௫அ. டாடற் கலிங்கமழித் தாயிர மானைகொன்ற
பாடற் கரிய பரணியுங் - கூடல்

௫௯. நராதிபன் கூத்தனெதிர் நண்ணியோர் கண்ணிக்
கொராயிரம்பொ னீந்த வுலாவும் - பராவுமவன்

௬0. பிள்ளைத் தமிழுமுன்னும் பேராத பல்குரவர்
வெள்ளத் தினுமிகுத்தோர் மெய்காப்ப - உள்ளத்து

௬க. வீரியஞ் செய்து வினையொழிய வேராச
காரியஞ் செய்யுங் கவிதையே - பாரில்

---

௫எ. மாதை விமலர் - திருவாமாத்தூரிற் கோயில்கொண்டருளிய சிவபெருமான். இருவர் - இரட்டையர். கலம்பகம் - திருவாமாத்தூர்க் கலம்பகம். முற்படை - தூசிப்படை.

௫அ. ஆடல்-வெற்றி. கலிங்கம்அழித்து-கலிங்கதேசத்தையழித்து. ஆயிரம் ஆனைகொன்ற - ஆயிரம்யானையைக் கொன்றமையால் இயற்றப் பெற்றுள்ள. பரணி-கலிங்கத்துப்பரணி. அப்பரணியின் சொல்லினிமை பொருளினிமையின் அருமைகளை நோக்கி, ‘பாடற் கரிய பரணி’ என்றார்; “பாடற் கரும்பரணி தேடற் கருங்கவி கவிச்சக்ர வர்த்திபரவ” (த்ரைலோக். பிள்ளை.) என்றார் கூத்தன் கவிச்சக்கிரவர்த்தியார். கூடல் - காவிரிப்பூம்பட்டினம்; காவிரி கடலொடு கலக்கும் சங்கமத்துறையில் அமைந்த நகராதலின் கூடலென்று கூறப்படும்; “மலியோதத் தொலி கூடற், றீதுநீங்கக் கடலாடியும்” (பட். 98-9) என்பது இங்கே ஆராயற் பாலது; நதியொடுநதியும் கடலொடு நதியும் கூடும் இடங்களிலுள்ள ஊர்கள் கூடலென்னும் பெயரால் வழங்கப்படுதல் மரபு.

௫அ-௯. கூடனராதிபன் - இரண்டாம் இராசராச சோழன்; “கூடற்பெரும்பெருமாள்” என்று இராசராசசோழனுலாவிலுங் கூறப் படுதல் காண்க. கூத்தன் - ஒட்டக்கூத்தர். உலா - இராசராசசோழனுலா. இச்செய்தி, “தெள்ளித்தம், முன்னூ நகரிலவன் மூதுலாக் கண்ணிதொறும், பொன்னூ யிரஞ்சொரிந்த பூபதியும்” என்று சங்கர சோழனுலாவிலுங் கூறப்பட்டுள்ளது.

௫௯-௬0. அவன் பிள்ளைத்தமிழ்-ஒட்டக்கூத்தர் இயற்றிய த்ரைலோக் துங்கசோழன்பிள்ளைத்தமிழ். குரவர் - சான்றோர்; சான்றோரென் பதற்குப் பதிற்றுப்பத்தில், “போரில் அமைதியுடையவீரர்” (கஎ: 12) என்று பொருள் எழுதியிருத்தலாலும் இங்கே ‘மெய்காப்ப’ என்றிருத்த லாலும் குரவரென்பதற்கு மெய்காப்பாளரென்று பொருள் கொள்ளல் பொருந்தும்.

௬௨. அரியா சனமுனக்கே யாரு னுனக்குச்
சரியாரு முண்டோ தமிழே - விரிவார்

௬௩. திகழ்பா வொருநான்குஞ் செய்யுள்வரம் பாகப்
புகழ்பா வினங்கண்மடைப் போக்கா - நிகழவே

௬௪. நல்லேரி னாற்செய்யு ளாற்கரணத் தேர்பூட்டிச்
சொல்லே ருழவர் தொகுத்தீண்டி - நல்லநெறி

௬௫. நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள் - மேலோரிற்

௬௬. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் வில்லியொட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளுஞ் - சீத்தையரைக்

௬௭. குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி

---

௬௨. அரியாசனம் - சிங்காதனம்; அரிந்தபனையோடாகிய ஆசனமுமாம். இக்கண்ணி, "அரியா சனத்தி லரசரோ டென்னைச், சரியாசனம்வைத்த தாய்" (தனிப்.) என்றதை உட்கொண்டு இயற்றப்பட்டது போலும். சரி - ஒப்பாகவுள்ளார்; "தாளிற் பதித்த மதித்தழும் புக்குச் சரியெம்பிரான், றோளிற் பதித்த வளைத்தழும்பே" (சிவகாமியம்மை இரட்டைமணிமாலை, 16.) விரிவு ஆர் - விரிதல் பொருந்திய.

௬௩. பா ஒருநான்கு - வெண்பா முதலியன. செய்யுள் வரம்பு - பாட்டுக்களின் எல்லை, வயலினிடத்தேயுள்ள வரப்பு.

௬௪. ஏர் - வனப்பு, உழும் பகடு. நாற்கரணம் - மனம் புத்தி சித்தம் அகங்காரமென்னும் அந்தக்கரணம் நான்கு.

௬௪-௫. நெறி நாலு - வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகத மென்பன. நாற்பொருள் - அறம் பொருள் இன்பம் வீடு.

௬௬. வில்லி - வில்லிபுத்தூராழ்வார். கோட்டிகொளும் - கூட்டம் கூடும்; "தானுமோர், புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்" (நாலடி. 260.) சீத்தையர் - கீழ்மக்கள். கல்லாது கோட்டிகொளும்: "நூலின்றிக் கோட்டி கொளல்" (குறள். 401.) இக்கோட்டியை, "வெள்ளைக் கோட்டி" என்பர் இளங்கோவடிகள்; சிலப். ௩௦ : 198.

௬௭. தூர் கட்டி - அடிப்பக்கம் பருத்து: தூர்: "தூரிற்றின் றன்ன தகைத்து." நாலடி. 138.

௬௬-௭. இவற்றிற் கூறப்பட்ட செய்திகள், "குட்டுதற்கோ" என வரும் தனிப்பாடலை யொட்டி யெழுந்தனபோலும்; பெரியோர் பலர்க்கு இக்கதைகள் உடன்பாடல்ல.

௬௮. வளர்ந்தனைபான் முந்திரிகை வாழைக் கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளி கேரத் - திளங்கனியாய்த்

௬௯. தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே - புத்திக்குள்

௭௦. உண்ணப் படுந்தேனே யுன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்ப முண்டு விளம்பக்கேள் - மண்ணிற்

௭௧. குறமென்று பள்ளென்று கொள்வார் கொடுப்பாய்க்
குறவென்று மூன்றினத்து முண்டோ - திறமெல்லாம்

௭௨. வந்தென்றுஞ் சிந்தா மணியா யிருந்தவுனைச்
சிந்தென்று சொல்லியநாச் சிந்துமே - அந்தரமேல்

௭௩. முற்றுணர்ந்த தேவர்களு முக்குணமே பெற்றார்நீ
குற்றமிலாப் பத்துக் குணம்பெற்றாய் - மற்றொருவர்

---

௬௮. இதிற்செய்யுளுக்குரிய பாகங்கள் கூறப்படுகின்றன. பால் - க்ஷீரபாகம். முந்திரிகை - திராட்சாபாகம். வாழைக்கனி - கதலீபாகம். கரும்பு - இட்சு பாகம். நாளிகேரத்திளங்கனி - நாளிகேரபாகம்; "முறுக்கம்பாகம் பாக முறுந்தமிழ் பாடுங்கடன்பணியே" (கம்பாந்தாதி, 93.) நாளிகேரக்கனி: "காய்மாண்ட தெங்கின் பழம் வீழ" (சீவக.), "தென்னம் பழம் வீழ் சோணாடா" (முத்துக். பிள்ளை. சிற்றிற்.) என்பவற்றால், தேங்காயைக் கனியென்று சொல்லுதலும் மரபென்று தெரிகின்றது.

௬௯-௭௦. புத்திக்குளுண்ணப்படுந்தேனே: "புலங்காணு முன்னை" என்பர் பின்; ௮௬-௭. விண்ணப்பம் - வேண்டுகோள்.

௭௧. குறம் - ஒருவகைப் பிரபந்தம், குறச் சாதி. பள் - ஒரு பிரபந்தம், ஒரு சாதி. மூன்றினம் - தாழிசை துறை விருத்தம்; அனுலோமப் பிரதிலோம சங்கரசாதிகள். திறம் - அழகு.

௭௨. வந்து - கைவரப் பெற்று. சிந்தாமணி - சீவகசிந்தாமணி; சிதறாத மணியென்பது மற்றொரு பொருள். சிந்து - ஒருவகை இசைப் பாட்டு, சிந்தென்னுமேவல்.

௭௩. முக்குணம் - சத்துவம், இராசதம், தாமதம். பத்துக்குணம் - செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதியென்னும் பத்துக்குணவணிகள்; தண்டி. சூ. 13.

இதன்கருத்து, தேவர்களிலும் தமிழ் உயர்ந்ததென்றபடி.

௭௪. ஆக்கிய வண்ணங்க ளைந்தின்மே லுண்டோநீ
நோக்கிய வண்ணங்க ணூறுடையாய் - நாக்குலவும்

௭௫. ஊனரச மாறல்லா லுண்டோ செவிகளுண
வான நவரசமுண் டாயினாய் - ஏனோர்க்

௭௬. கழியா வனப்பொன் றலததிக முண்டோ
ஒழியா வனப்பெட் டுடையாய் - மொழிவேந்தர்

௭௭. வாங்கு பொருள்கோள் வகைமூன்றே பெற்றார்நீ
ஓங்குபொருள் கோள்வகையெட் டுள்ளாயே - பாங்குபெற

௭௮. ஓர்முப்பா லன்றியைம்பா லுள்ளா யுனைப்போலச்
சீர்முப்ப தும்படைத்த செல்வரார் - சேரமான்

---

௭௪. வண்ணங்கள் ஐந்து - வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை; "பல்வகை வடிவிரு நாற்றமை வண்ணம்" (நன். சூ. 454.) வண்ணங்கள் நூறாவன, குறிலகவற்றூங்கிசைவண்ணமுதல் இடைமெல்லிசை மயங்கிசை வண்ணமிறுதியாக உள்ளவை இவற்றின் விரிவை யாப்பருங்கலவிருத்தி முதலியவற்றிற் கண்டுகொள்க. நா - நாவினிடத்து.

௭௫. ஊனம் - குறைவு. ரசம் ஆறு - கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பென்னும் ஆறுசுவைகள். நவரசம்: ௯உ - ஆம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க. உணவிற்குரிய ரசம் ஆறே; அவையும் ஊனத்தையுடையன. உனக்குரியவை ஒன்பது; இவை நுகருந்தோறும் புதியனவாகவே தோன்றும்; ஆதலால், அவற்றினும் இவை சிறந்தன வென்றபடி. வனப்பு - அழகு. வனப்பெட்டு - அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபென்பன; இவற்றின் இலக்கணங்களை, "வனப்பியல்தானே" (தொல். செய். சூ. 235) என்னும் சூத்திரமுதலியவற்றாலறிந்து கொள்க.

௭௬-௭. வேந்தரின் பொருள்கோளின்வகைமூன்று - உடையவரின்மையின் தானேவந்துற்றபொருள், சுங்கவருவாய்ப்பொருள், பகைவர் திறை யென்பன; "உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த், தெறுபொருளும் வேந்தன் பொருள்" குறள். 756. பொருள்கோள் வகைஎட்டு - யாற்றுநீர், மொழிமாற்று, நிரனிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு, அடிமறிமாற்றென்பன; நன்னூல், 411 - ஆம் சூத்திரமுதலியவற்றால் இவற்றின் இலக்கணங்கள் புலனாகும்.

௭௮. முப்பால் - அறம் பொருள் இன்பம்; திருக்குறள். ஐம்பால்- ஆண்பால் முதலிய பால்கள் ஐந்து; மனிதர்களுக்கு ஆண் பெண் அலி யென்னும் மூன்றுபால்கள் உளவென்பதைக் குறிப்பாற்புலப்படுத்தினர். உலகத்தார் சீர் எட்டே (அஷ்டைசுவரியம்) என்பதைக் குறிப்பிக்கிறார். சீர் - செல்வம், செய்யுட்சீர். சீர்முப்பதாவன: ஓரசைச்சீர் இரண்டு, ஈரசைச்சீர் நான்கு, மூவசைச்சீர் எட்டு, நாலசைச்சீர் பதினாறு.

சேரமான் - சேரமான்கணைக்காலிரும்பொறை.

எசு. தன்னடிக் கண்டு தளைவிடுத்தா யேழ்தளையுன்
பொன்னடிக்குண் டென்பதென்ன புத்தியோ - என்னரசே

அ0. திண்பா வலர்க்கறிவாஞ் செந்தமிழாய் நின்றவுன்னை
வெண்பாவென் றோதுவது மெய்தானோ - பண்பேர்

அக. ஒலிப்பாவே சங்கத் துகமூன் றிருந்தாய்
கலிப்பாவென் றோதல் கணக்கோ - உலப்பில்

அஉ. இருட்பா மருண்மாற்றி யீடேற்று முன்னை
மருட்பாவென் றோதல் வழக்கோ - தெருட்பாப்

அங-. பொருத்தமொரு பத்துப் பொருந்துமுனைத் தானே
விருத்தமென்று சொல்லல் விதியோ - இருட்குவையை

---

எசு. தன் அடிக்கு அண்டு தளை விடுத்தாய் - தன் அடிகளிற் பொருந்திய விலங்கினை நீக்கினாய். சோழன்செங்கணான் சேரமான் கணைக்காலிரும்பொறையைப் போரில்வென்று காவில்விலங்கிட்டுச் சிறைப்படுத்தியபொழுது சேரமானுடைய புலவராகிய பொய்கையார் அச்சோழன்மீது, '**களவழிநாற்பது**' என்னும் நூலியற்றி அதன்பயனாகச் சேரமான்கணைக்காலிரும்பொறையைச் சிறையினின்றும் விடுவித்தன ரென்பது இங்கே அறியற்பாலது ; "களவழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன் கால்வழித் தளையை வெட்டியர சிட்டவவனும்" (**கலிங் கத்துப் பரணி**, 182), "மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப், பாதத் தளைவிட்ட பார்த்திபனும்" (**விக்கிரம. உலா**), "பொறையனைப் பொய்கைக்குப் பண்டு, கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்" (**குலோத். உலா**), "நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்ல வன் காற்றளையை விட்டகோன்" (**இராச.**) என்பவற்றால் இச்சரிதத்தை அறியலாகும். ஏழ்தளை - நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரி யத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளையென்பன. தளை - செய்யுட்டளை, விலங்கு.

அ0. வெண்பா : வெண்மை - அறிவின்மை, வெள்ளை நிறம்.

அக. உகம் மூன்று இருந்தாய் - மூன்று யுகத்திலும் இருந்தாய். கலிப்பா - ஒருவகைப்பா, கலியுகத்திற்குமட்டும் உரிய பா. கணக்கோ - நியாயமோ.

அஉ. இருள் பா மருள் மாற்றி - இருட்டுமயமாகிய பரவியமயக் கத்தைமாற்றி. மருட்பா - ஒருவகைப்பா ; மயக்கத்தைச் செய்யும் பா வென்பது மற்றொருபொருள்.

அஉ-ங. பாப்பொருத்தமொருபத்து - மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் எனப்பத்து ; இவை பாட்டுடைத்தலைவன்பெயர்க்கும் அவன்மேற் செய்யப்படும்நூலின் முதற் செய்யுளின்முதற்சீருக்கும் பார்க்கின்ற பொருத்தங்கள். விருத்தம் - ஒரு வகைச்செய்யுள், பொருத்தமில்லாதது.

அச. முந்தியொளி யால்விலக்கு முச்சுடரென் பாருனைப்போல்
வந்தென் மனத்திருளை மாற்றுமோ - சிந்தா

அரு. மணிகொடையின் மிக்கதென்பார் வண்கொடையு முன்பேர்
அணியும் பெருமையினு லன்றோ - தணியும்

அசா. துலங்காரங் கண்டசரங் தோள்வளைமற் றெல்லாம்
அலங்கார மேயுனைப்போ லாமோ - புலங்காணும்

அஎ. உன்னைப் பொருளென் றுரைக்குந் தொறும்வளர்வாய்
பொன்னைப் பொருளென்னப் போதுமோ - கன்னமிட்டு

---

அச. கற்றவர்களுக்கு ஞானநூல் அகவிருளை நீக்குதலின்; 'உனைப் போல்...மனத்திருளை மாற்றுமோ' என்றார்; "இங்கித னுமங் கூறி னிவ் வுல கத்து முன்னாட், டங்கிரு ளிரண்டின் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற, பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற, செங்கதி ரவன்போ னீக்குந் திருத்தொண்டர் புராண மென்பாம்" (பெரிய. பாயிரம். 10); "ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி, எங்கொலி நீர் ஞாலத் திருள்கடியு—மாங்கவற்றுள், மின்னேர் தனியாழி வெங்கதி ரொன் றேனையது, தன்னே ரிலாத தமிழ்" தண்டி. சூ. 49. மேற்.

முச்சுடர்......மனத்திருளை மாற்றுமோ: "வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது, பொங்கு மதியொளிக்கும் போகாது - தங்கும், வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க், கிளமையான் வந்த விருள்" தண்டி. சூ. 49, மேற்.

அரு. உன்பேரென்றது ஐம்பெருங்காப்பியத்திலொன்றன் பெயராகிய சிந்தாமணி யென்பதை.

அசா. துலங்கு ஆரம் - விளங்குகின்ற மார்பின்மாலை. அலங்காரமே - அணியிலக்கணமாகவுள்ளாய்; "கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான், மற்றோ ரணிகலம் வேண்டாவாம்" நீதிநெறி. 13.

அசா-எ. புலங்காணும் உன்னை: "புத்திக்கு ளுண்ணப் படுந் தேனே" என்றார் முன்னும்; எ0. உரைக்குந்தோறும்: சிலேடை; தமிழுக்கு, உரைத்தல் - சொல்லுதல்; பொன்னுக்கு, உரைத்தல் - தேய்த்தல். இக்கண்ணியின் கருத்துடன், "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவர்க்கு, மாடல்ல மற்றை யவை" (குறள்), "வைப்புழிக் கோட் படா வாய்த்தீயிற் கேடில்லை, மிக்க சிறப்பி னரசர் செறின்வெளவா, ரெச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன, விச்சைமற் றல்ல பிற" (நாலடி.), "வெள்ளத்தா லழியாது வெந்தழலால் வேகாது வேந்த ராலுங், கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவு றாது, கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு மிகவெளிது கல்வி யென்னு, முள்ளத்தே பொருளிருக்க வூரூராப் பொருள்தேடி யுழல்கின் றாரே" (பழையபாடல்) என்பவை ஒப்புநோக்கற்பாலன.

அஅ. முன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்
என்ன பொருளுனைப்போ லெய்தாவே - நன்னெறியின்

அகூ. மண்ணிற் புகழுருவாய் வாழ்வதற்கும் வாழுநர்
விண்ணிற்போய்த் தேவுருவாய் மேவுதற்கும்-எண்ணியுனைக்

கூ0. கொண்டுபுகழ் கொண்டவர்க்கே கூடுமுனைக் கூடாத
தொண்டருக்குத் தென்பாலே தோன்றுமால் - தண்டமிழே

கூக. ஈங்குனது சங்கத்தா லீச ருயர்ந்தாரோ
ஓங்குமவ ரானீ யுயர்ந்தாயோ - பூங்கமல

கூஉ. வீடாளும் வாணியங்கை மேலே யிருந்தாயோ
ஏடாக வுன்மே லிருந்தாளோ - ஆடரவத்

கூங. தாழ்பாய லாளரைநீ தானே தொடர்ந்தாயோ
சூழ்பாயோ டுன்னைத் தொடர்ந்தாரோ - வாழ்வேயென்

---

அஎ-அ. கன்னமிட்டு - காதினுள்வாங்கி ; கன்னக்கோலாற் சுவரில் துவாரஞ் செய்தென்பது மற்றொருபொருள். நன்னெறி - இங்கே கொடை.

அகூ. புகழுரு - புகழுடம்பு.

அகூ-கூ0. உனைக்கொண்டு புகழ்கொண்டவரென்றது புலவர்செய்யும் தமிழ்ப்பாடல்களைப்பெற்ற உபகாரிகளை. தொண்டர் - ஆசைக்கு அடிமைப்பட்டவர். "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின், வலவனேவா வான வூர்தி, எய்துப வென்ப" (புறநா. உஎ : 7-9) என்பதன் கருத்து இவ்விரண்டு கண்ணிகளிலும் அமைந்திருக்கின்றது.

கூக. சங்கம் - சேர்க்கை, தமிழ்ச் சங்கம்.

கூஉ. கலைமகளின் திருக்கரத்தின்மேல் சுவடி இருத்தல் ஈண்டு அறியற்பாலது ; "பொத்தகம் படிக மாலை குண்டிகை பொருள்சேர் ஞான, வித்தகந் தரித்த செங்கை விமலையை" (கம்ப. பாயிரம்); "இன்னங் கலைமகள் கைமீதிற் புத்தக மேந்தியந்தப், பொன்னம் புயப்பள்ளி புக்கிருந்தாள்" தனிப்பாடல்.

கூஉ-ங. அரவப்பாயலாளர் - திருமால். திருமால் பாயோடு உன்னைத் தொடர்ந்தாரென்றது, திருவெஃகாவிற் கோயில் கொண்டெழுந்தருளிய பெருமாள், "கணிகண்ணன் போகின்றான்" என்ற திருமழிசையாழ்வார் செய்யுளைக்கேட்டுத் தம்முடைய பணிப்பாயலைச் சுருட்டிக்கொண்டு அவருடன் சென்றனரென்ற வரலாற்றைச் சுட்டியது ; இதன் விரிவு திருமழிசையாழ்வார் சரித்திரத்தால் உணரலாகும் ; "பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப் பணைத்தோ ளொருத்தலைப்பப், பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்டலே" மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், காப்பு. 1.

௬௪. ஞோதிமுனி கேட்க வுனைமுருகர் சொன்னாரோ
சோதி யவரைநீ சொற்றனையோ - பேதியா

௬௫. நேசருனக் கேபொருளாய் நின்றாரோ நீண்மதுரை
வாசருக்கு நீபொருளாய் வந்தாயோ - பாசமுறும்

௬௬. என்செய்தி நீகண் டிரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானோ வுரைசெய்வேன் - இன்சொல்லாய்

௬௭. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தகவென்ற - சொற்குள்ளே

௬௮. எல்லார்க்கும் புத்தி யியம்பிக் கரையேற்ற
வல்லா யுனக்குரைக்க வல்லேனோ - சொல்லியவுன்

௬௯. ஈரடிக்குள் ளேயுலக மெல்லா மடங்குமெனின்
நேரடிக்கு வேறே நிலனுண்டோ - ஓரடிக்கோர்

---

௬௪. முனி - அகத்தியர். உனையென்றது தமிழை நோக்கி. அகத்தியருக்கு முருகக்கடவுள் தமிழறிவுறுத்தியதை, "சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழவிரு செவிகுளிர வினியதமிழ் பகர்வோனே" (திருப்புகழ்), "குறுமுனிக்குந் தமிழுரைக்குங் குமரமுத்தந் தருகவே" (திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்), 'அகத்தியனார்க்குத் தமிழையறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக்கடவுள்' (தொல். சூத்திரவிருத்தி) என்பவையும் தெரிவிக்கின்றன.

௬௫. நேசர், மதுரைவாசர் - சோமசுந்தரக்கடவுள். பொருள் - அர்த்தம், இறையனாரகப் பொருள்.

௬௬. நீயென்றது இவ்வளவு பெருமைவாய்ந்தாயென்பதைப் புலப்படுத்தி நின்றது; "நின்னையானகன் றாற்றுவனோ" (திருச்சிற். 12-பேர்.) என்புழிப் போல.

௬௭. "கற்க......தக" குறள். 391.

௬௯. ஈரடியென்றது திருக்குறளை. 'உன் ஈரடிக்குள்ளே யுலகமெல்லாமடங்கும்' என்றது, "மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான், ஞால முழுது நயந்தளந்தான் - வாலறிவின், வள்ளுவருந் தங்குறள் வெண் பாவடியால் வையத்தா, ருள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து" (திருவள்ளுவ. 6) என்ற செய்யுளின்கருத்தைத் தழுவிவந்தது. நேரடி - செய்யுளின் நான்கு அடிகள்; நாலடியாரென்றுமாம்.

௧௦௦. ஆயிரம் பொன்னிறைக்கு மையரை வீதியிலே
போயிரந்து தூதுசொல்லப் போக்கினோ - யாயிருந்தும்

௧௦௧. மாண்பாயோர் தூதுசொல்லி வாவென்பே னென்வருத்தம்
காண்பாயென் பெண்மதிநீ காணாதே - ஆண்பனைநற்

௧௦௨. பெண்பனையா யாக்கினையாற் பெண்களிலே காரைக்கால்
வண்பதியா ரௌவையென வந்துதித்தாய் - நண்பார்

௧௦௩. திலதவதி யாருடனே சென்மித்தாய் மாடக்
குலதவதி யானத்தர் கூடல் - பலதவஞ்சேர்

௧௦௪. மேனியார் கண்டிகையும் வெண்ணீறுங் கண்டுருகும்
மானியார் தேசிகனா வந்துதித்தாய் - ஞானியார்

---

௧௦௦. தூதுசொல்ல - ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாருக்காகப் பரவை நாய்ச்சியாரிடம் தூதுசொல்ல; "பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பாற், றூதன்று சென்றதென் னாரூர்த்தியாகர்" (திருவாரூர்க் கோவை); "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்......கன்னித், தண்டமிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்" திருவிளை.

௯௯-௧௦௦. அடிக்கோராயிரம் பொன் இறைக்குமைய ரென்றது திருவாரூர் வீதிவிடங்கத்தியாகேசரை; "கனக மோரடிக் காயிர நல்கு மெங் கடவுள், அனக நாயகன்" (திருவாரூர்ப் புராணம்,திருநகரச். 47); "அடியொன்றுக், குய்யும் படிபசும்பொ னோரா யிரமுகந்து, பெய்யுந் தியாகப் பெருமானே","பெய்யுமடிக் காயிரம் பொன்னென்னப் பேறளிக் குங், கையு மிரப்புங் கலந்தீரே" திருவாரூருலா, 173-4; 429.

௧௦௧. பெண்மதி - பேதைமை; "பெண்ணறி வென்பது பெரும் பேதைமைத்தே" பழம்பாட்டு.

௧௦௧-௨. 'ஆண்பனை பெண்பனை யாக்கினை' என்றது, திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் திருவோத்தூரில் ஓரன்பர்க்காக ஆண்பனை களைப் பெண்பனைகளாக்கியதைக் குறிப்பித்தது; "மன்றிற் பனைவடிவ மாற்றினாய்" என்பர் பின்னும்; ௧௯௨; "ஆண்பனை பெண்பனை யாக்கிய வித்தக வாடுக செங்கீரை"என்றாரொருபெரியார். காரைக்கால் வண்பதி யார் - காரைக்காலம்மையார்; "அம்மைதமக் கில்லாதா ரம்மைதா மாவிருந்தார், அம்மையென்று முன்னுரைத்த வம்மையாய்" என்பர் பின் னும்; ௧௭௪. ஔவை - ஔவையார்.

௧௦௩. 'திலதவதி யாருடனே சென்மித்தாய்' என்றது திருநாவுக் கரசரை நினைந்து. மாடக் குலக் கூடலென இயைக்க. தவத்தையும் தியானத்தையும் உடையவர்கள் நிரம்பிய கூடல்; கூடல் - மதுரை.

௧௦௪. மானியார் - மங்கையர்க்கரசியார். தேசிகன் - திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்.

கா௦ரு. துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்குஞ்
சிங்கடிக்குந் தாதையாய்ச் சீர்செய்தாய் - இங்குநீ

க௦சு. பெண்களெல்லாம் வாழப் பிறந்தமையா லென்மனத்திற்
புண்களெல்லா மாறப் புரிகண்டாய் - ஒண்கமலத்

க௦எ. தன்னந் தனைவிடுப்பே னன்னந்தா னங்கவரை
இன்னந்தான் கண்டறியா தென்பரே - மன்னெந்தாய்

க௦அ. அப்பாலோர் வண்டை யனுப்பி னவர்காமம்
செப்பாதே யென்றுற் றிகைக்குமே - தப்பாது

க௦௯. மானைப்போய்த் தூதுசொல்லி வாவென்பேன் வல்லியப்பூந்
தானைப் பரமர்பாற் சாராதே - ஏனைப்பூங்

கக௦. கோகிலத்தை நான்விடுப்பேன் கோகிலமுங் காக்கையினம்
ஆகி வலியானுக் கஞ்சுமே - ஆகையினால்

---

க௦ச-ரு. ஞானியார் - இசைஞானியாருடைய. மகவாக - திருக்குமாரராக; என்றது சுந்தரமூர்த்திநாயனாரை. வனப்பகை சிங்கடி யென்பவர்கள் கோட்புலி நாயனாருடைய மகளிர். இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் தம்முடைய மக்களாகப் பாவித்து, "வனப்பகையப்பன்", "சிங்கடியப்பன்" என்று தம்மைத் திருக்கடைக்காப்பில் அருளிச் செய்தனர்.

க௦சு. புரி - செய்வாயாக.

க௦எ. பிரமதேவர் அன்னவடிவங்கொண்டு சென்று சிவபெருமான் திருமுடியைக் காணாமையை இக்கண்ணி குறிக்கின்றது; "எகின நேடியறி யாத தேமுடிமு னெங்ங னின்றுசெவி யருகுறும்" (வாட்போக்கிக். 26.) எந்தாய் - எந்தையே.

க௦அ. 'காமஞ்செப்பாதே' என்றது, "கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி, காமஞ் செப்பாது கண்டது மொழிமோ" (குறுந். 2) என்றதை நினைந்து.

க௦௯. வல்லியப் பூந்தானை - புலித்தோலாடை. புலியைக்கண்டு மான் அஞ்சும் என்றபடி.

கக௦. காக்கையினம் ஆகி - காக்கையினமாதலால். வலியான் - கரிக்குருவி. அது மதுரையில் சோமசுந்தரக்கடவுளை வழிபட்டு வன்மையுற்றுக் காக்கை முதலியவற்றை வெல்லும் இயல்பும் வலியானென்னும் பெயரும் பெற்றுச் சிவபெருமானிடத்து ஐக்கியமாயிற்றென்றவரலாறு இங்கே அறிதற்பாலது. இதனைத் திருவிளையாடற்புராணங்களாலும், "பொறையற்ற காகத்துக் காற்றும லேதினம் போதநொந்தே, குறைவற்ற செல்வ மதுரைவந் தேதன் குறையனைத்து, மறையமித் துஞ்சய மந்திரத் தாலக் கரிக்குருவிப், பறவைக் கருள்சொக்க னேபர தேசி பயகரனே" (திருவிளையாடற் பயகரமாலை) என்ற செய்யுளாலும் அறியலாகும்.

கககக. இந்தமனத் தைத்தூதா யேகென்பே னிம்மனமும்
அந்தமனோ தீதர்பா லண்டாதே - எந்தவிதம்

ககஉ. என்றென் றிரங்கினே னென்கவலை யெல்லாம்பொற்
குன்றனையா யுன்னுடனே கூறுகேன் - சென்றாலும்

ககங. பண்ணிய பத்தொன் பதினா யிரத்திருநூற்
றெண்ணியதொண் ணூற்றொன் றெனுந்தொடையாய்-நண்ணீ

ககச. ஒருதொடை வாங்கி யுதவாயோ வோர்சே
விருதுடை யார்க்குநீ வேறோ - தருமிக்கே

ககரு. ஓர்வாழ்க்கை வேண்டி யுயர்கிழிகொள் வான்கொங்கு
தேர்வாழ்க்கை யென்றெடுத்த செய்தியும் - கீரன்

ககசா. இசையா வசையி னியம்பினா னென்றே
வசையாடித் தர்க்கித்த வாக்கும் - இசையான

ககஎ. பாட்டுக் கிரங்கியொரு பாணனுக்குச் சேரலன்மேற்
சீட்டுக் கவிவிடுத்த சீராட்டும் - பாட்டியலில்

---

ககக. மனோதீதர் - மனத்திற்கு எட்டாதவர்.

துயரை மாற்றுவித்தற்குவழி யென்பதை வருவித்து எந்தவிதமென் பதனோடு சேர்த்து முடித்துக்கொள்க.

ககஉ. பொற்குன்றனையாயென்று கூறியது தமிழின் அழியாமையைக் கருதி; "மூவாத்தமிழ்" எனவும், "கன்னித்தமிழ்" எனவும் வழங்குதலை நோக்குக: அதனைச் சார்ந்தவருக்கு யாதொரு குறைவு மிராதென்பதனைப் புலப்படுத்தியபடி; "பஹுகுடும்பியாயிருப்பார் சிலர் ஒருமலையடியைப்பற்றி ஜீவிக்குமாப்போலே" (திருப்பாவை, தனியன், பெரியவாச்.) என்றது இங்கே கருதத்தக்கது.

ககங. தொடை - செய்யுட்டொடை; அவை, 19291 என்பதனையும் அவற்றின் வகையையும் தொல்காப்பியம், செய்யுளியல், "மெய்பெறுமரபின்" (சூ. 101) என்னும் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையால் தெளியலாகும்.

ககச. சே விருது - இடபக்கொடி.

ககச-ரு. ஓர் வாழ்க்கை - இல்லற வாழ்க்கை. தருமி - ஓர் ஆதிசைவப் பிரமசாரி; அவனுக்கு, "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளைப்பாடி யளித்து இறைவன் நிதி யளித்தது ஒரு திருவிளையாடல்.

ககரு-சா. கீரன் - நக்கீரர். தர்க்கித்த - வாதித்த.

ககஎ. பாணன் - பாணபத்திரர். சேரலன் - சேரமான். சீட்டுக்கவி - "மதிமலி புரிசை" என்னும் திருமுகப்பாசுரம்.

௧௧அ. நாத்திரமா மேவுபொரு ளன்று வறுபதெனும்
சூத்திரமாப் பாடியருள் டோற்றமும் - மாத்திரமோ

௧௧௯. உன்னு டவர்விளையாட் டொன்றே வடமதுரைக்
கந்நேர முன்பிறகே யார்வந்தார் - மன்னவன்மேற்

௧௨0. காரியார் நாரியார் கண்டகவி யைப்பகிர
வாரியிலாக் கானகத்தில் வந்தவரார் - நாரிழுடும்

௧௨௧. போற்றியுறும் பத்திரற்காப் போந்து கிழவுருவில்
தோற்றி விறகு சுமந்தவரார் - தேற்றியவற்

௧௨௨. கீயரிய பொற்பலகை யிட்டவரார் மற்றவன்றன்
நேயமனை விக்கெதிரா நேர்ந்தவளைப் - போயவையில்

௧௨௩. தள்ளியிசை தாபிக்கத் தக்கவரார் தென்மதுரைக்
குள்ளிருந்த சொக்கருனக் குள்ளன்றே - எள்ளி

௧௨௪. வடமொழியில் வேத வசனமே யீசர்
திடமொழியா மென்பார் சிலரே - அடரும்

௧௨௫. பரசமய கோளரியாய்ப் பாண்டிநா டெங்கும்
அரசமய நீநிறுத்து மந்நாள் - விரசுநீ

---

௧௧அ. நா திரமா - நாவின்கண் உறுதியாக. பொருள் - அகப் பொருளிலக்கணம்; என்றது இறையனாரகப்பொருளை; "அன்பினைந் திணையென் றறுபது சூத்திரங், கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற், பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத், தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்" (கல்லாடம், 3.) மாத்திரமோ - இவ்வளவு தானோ?

௧௧௯. இதிற் கூறப்பட்டது இடைக்காடன் பின்போன திருவிளையாடற் சரிதை.

௧௨0. இது காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடலைக் குறிக்கின்றது; திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணத்தில், காரியார் நாரியார் பாப்பகுந்த திருவிளையாடலைப் பார்க்க. வாரி - வழி.

௧௨௧. பத்திரன் - பாணபத்திரர்.

௧௨௨. அவன் - பாணபத்திரர். எதிரா நேர்ந்தவளை - இலங்கையிலிருந்து விரோதியாக வந்த விறலியை.

௧௨௧-௩. இவற்றுட் கூறப்படும் சரிதத்தைத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் சாதாரிபாடிய திருவிளையாடல் முதலியவற்றிற் காண்க.

௧௨௫. பரசமய கோளரியாய் - திருஞான சம்பந்தமூர்த்தியாய். அர சமயம் - சைவ சமயம்.

கஉகூ. ஆதிக்கண் வையையில்வே தாகமத்தைத் தாபித்தாய்
சோதிக்கி னேடகமே சொல்லாதோ - வேதத்தே

கஉஎ. வாதவனங் கண்டா தடைத்தகத வந்திறந்தாய்
வேதவனங் கண்டால் விளம்பாதோ - வேதம்

கஉஅ. அமிழ்திதினுமிக் கென்னுமுனிக் கன்பருளைச் சொன்னார்
தமிழ்முனியென் னும்பேர்தா ராதோ - தமிழால்

கஉகூ. அறம்பொரு ளின்பம்வீ டாரணர்சொன் னைரத்
திறம்பரமர் வாக்கேசெப் பாதோ - மறந்திடலில்

கஙo. கற்பலகை யோதுமறை காணார்கீழ் நிற்கவுநீ
பொற்பலகை மேலிருந்தாய் போதாதோ - தற்பரரோ

---

கஉ௫-கூ. பரசமய கோளரியாய்த் தாபித்தாயென்க.

வையையில் வேதாகமத்தைத் தாபித்தாயென்றது வையை நதியில் திருப்பாசுரம் வரைந்த ஏடு எதிரேறிச்சென்று வேதாகமங்களை நிலைநிறுத்திய செய்தியை நினைந்து. ஏடகம் - திருவேடக மென்னும் திருப்பதி; மேற்கூறிய ஏடுகள் சென்று தங்கிய இடமாதலால் இஃது இப்பெயர் பெற்றது. வேதத் தேவு - வேதமாகிய தெய்வம்.

கஉஎ. ஆதவன் அங்கு அண்டாது - சூரியனுடைய வெயில் அங்கே அணுகாதபடி. கதவம் - கிழக்குவாயிற் கதவு. தேவு அடைத்த கதவமென்க. வேதவனம் - வேதாரணியம்.

கஉஅ. மிக்கென்னும் - மிக்கது என்னும்; "மிக்கென் றேதப் படுகை வலியம்" (மயிலையந்தாதி, 76.) முனிக்கு - அகத்திய முனிவருக்கு; "ஆதியிற் றமிழ்நூ லகத்தியற் குணர்த்திய, மாதொரு பாகன்" என்பது இங்கே அறியத்தக்கது. தமிழ்முனி: "வரத னொருதமிழ் முனிவரன்" தக்க. 40.

கஉகூ. ஆரணர் - பிரமனுடைய அவதாரமாகிய திருவள்ளுவர். பரமர் வாக்கென்றது திருவள்ளுவமாலையிலுள்ள, "என்றும் புலராது" என்ற செய்யுளை.

கஙo. கற்பு அலகை - கல்வியின் அளவினை. பொற்பலகை மேல் இருந்தாய் - சங்கப் பலகையின் மீது சங்கப்புலவர்களாக வீற்றிருந்தாய்; "மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்த் தெய்வச் சங்கப், பாவலர் வீற்றிருக்கும் பாண்டிநன் னாடு போற்றி", "வருந்திநான் முகன்மா றேட வளர்ந்தழற் பிழம்பாய் நின்றோன், நெருங்கிநீர் மண்ணும் விண்ணுமெங்கணு நிரம்பி நின்ற, னிருந்தமிழ்ச் சங்கத் தின்கீழ் நின்றன னெவருங் காண" (திருவால.) என்பவற்றாற் சிவபிரான் கீழே நின்றமை அறியப்படும்.

கஙக. டெண்ணிறந்த வாசியழைத் திட்டாய் சதுர்வேதப்
பண்ணிறைந்த வாசி பகராதோ - அண்ணலார்

கஙஉ. தென்பா லுகந்தாடுஞ் செய்தியெல்லா முன்னிடத்தில்
அன்பாலென் றப்பாலு மாரறியார் - உன்பேர்

கஙங. பழியார் திசைச்சொல்லார் பன்னூர் திருவாய்
மொழியார் குழறி மொழிவார் - அழியா

கஙச. உருவால வாயிருக்கு மோதரிய முத்தித்
திருவால வாயிருக்குஞ் செல்வர் - ஒருமால்

கஙரு. வடமதுரை யேறுமுன்னே வந்தவடி வென்னத்
தடமதுரை மீனுயர்த்த தாணு - படர்தீர்க்கும்

---

கஙக. வாசி - குதிரை. சதுர்வேதப் பண்ணிறைந்த வாசி - வேதக் குதிரை; பண்: சிலேடை. திருவாதவூரருக்காக நரிகளைக் குதிரையாக்கிய பொழுது சோமசுந்தரக்கடவுள் வேதத்தைக் குதிரையாக்கி அதன் மீதூர்ந்துவந்தன ரென்பது இங்கே அறிதற்குரிய செய்தி; "மறைப்பரி தனக்கா தாரமாகித் தரிப்ப" திருவிளை. நரிபரி.

கஙஉ. தென்பாலுகந்தாடும்: "தென்பாலு கந்தாடுந் தில்லைச்சிற் றம் பலவன்" (திருவா.) சிவபெருமான் தென்பாலுகந்தாடுவது தமிழின் பாலுள்ள அன்பினாலேயே யென்பது, "கடுக்க வின்பெறு கண்டனுந் தென்றிசை நோக்கி, அடுக்க வந்துவந் தாடுவா னுடலி னிளைப்பு, விடுக்க வாரமென் காறிரு முகத்திடை வீசி, மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றோ" (திருவிளை.) என்பதனாலும் விளங்கும்.

கஙங. திசைச்சொல்லார் பன்னூரென்றது வேறுமொழியில் ழகரம் இன்மையின் தமிழென்னும் பெயரைச் சொல்ல இயலாமைபற்றி; திராவிட முதலிய பெயர்களால் தமிழைக்குறிப்பது இது பற்றிப்போலும். திருவாய் மொழியாரென்றது வைணவர்களை.

கஙங-ச. அழியா உருவால் - அழியாத உருவத்தையுடைமையினால். அவாய் - விரும்பி. இருக்கும் ஓதரிய - வேதங்களும் கூறுதற்கரிய.

கஙரு. வடமதுரை ஏறுமுன்னே வந்த வடிவென்றது திருமாலின் மச்சாவதாரத்தை. சத்திய விரதனென்னும் ஒரு பாண்டியன் வையை நதியில் அருக்கியங் கொடுத்தற்காக நீரைக்கையில் எடுத்தலும் திருமால் அந்நீரில் மீன் வடிவமாக அவதரித்து வளர்ந்தனர். இவ்வரலாறு **ஸ்ரீபாகவதம்** 8-ஆங் கந்தம்,மச்சாவதார முரைத்த அத்தியாயத்தால் நன்கு விளங்கும். பாண்டியர்களுக்கு மீனக்கொடியமைந்தது இதுபற்றிப் போலும்,

கங்சு. சத்திபுரத் தோர்பாற் றழைத்துமகிழ்ந் தோர்சிவன்
முத்திபுரத் தோர்பான் முளைத்தெழுந்தோர் - அத்திசைபோல்

கங்எ. ஆங்கோ ரிருநான் கயிரா வதஞ்சுமக்கும்
பூங்கோயிற் குள்ளுறைந்த புண்ணியனார் - பாங்காம்

கங்அ. இடம்பவன மீதாக விந்திரன்வந் தேத்தும்
கடம்பவன மீதிலுறை காந்தர் - அடும்போர்

கங்கூ. அலகம் பரிக்கு மரியார் முடிவேய்ந்
துலகம் பரிக்குமுறை யுள்ளார் - பலநாளும்

கசo. நின்றவூர்ப் பூசலார் நீடிரவெ லாநினைந்து
குன்றுபோ லேசமைத்த கோயிலும் - நன்றிதரும்

கசக. தாயான கங்கைமுடி தான்குளிரக் கண்ணப்பர்
வாயா லுமிழ்ந்ததிரு மஞ்சனமும் - தூயமழைத்

கசஉ. துன்பார் திருக்குறிப்புத் தொண்டர் துணித்துறையில்
வன்பா யளித்தபரி வட்டமும் - இன்பாத்

---

கங்சு. சத்தி புரத்து ஓர் பால் - தேவியின் திருமேனியின் ஒரு பாகத்தில். முளைத்தெழுந்தோர்: "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" திருவாலவாய்த் தேவாரம்.

கங்எ. சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் விமானம் எட்டுத் தெய்வயானைகளால் தாங்கப் பெறுதல், "எட்டானை பூண்டெழுந்த விந்திரவி மானத்து" (சொக்க நாதநுலா), "கிரியெட்டு மெனமழையைக் கிழித்தெட்டும் புழைக்கைமதிக் கீற்றுக் கோட்டுக், கரியெட்டுஞ் சினமடங்க வலெட்டு மெட்டெட்டுக் கணமுந் தாங்க, விரியெட்டுத் திசை பரப்ப மயனிருமித் துதவியவவ் விமானஞ் சாத்தி, அரியெட்டுத் திருவுருவப் பரஞ்சுடரை யருச்சிப்பா னுயி னனே" (திருவிளை. க : 83) என்பவற்றாலும் அறியலாகும்.

கங்அ. இடமும் பவனமும் ஈது ஆக; பவனம் - கோயில். அடும் - போர் செய்தற்குரிய.

கங்கூ. அலகு - அம்பின் நுனி; "அஞ்சம்பையு மையன்றன தலகம் பையு மளவா" (கம்ப.) அம்பு அரிக்கும் - அம்பையுடைய திருமாலுக்கும்; அம்பாகிய அரிக்குமெனலுமாம். பரிக்கும் முறை - பாதுகாக்கும் முறை.

கசo. பூசலார் - பூசல் நாயனார்.

கசஉ. "அன்பா யளித்தபரி யட்டமும்" என்றும் பாடங்கொள்ளலாமென்று தோற்றுகிறது.

கசங. தணிவரிய மானக்கஞ் சாறனார் சாத்தும்
மணிமுடிசூழ் பஞ்ச வடியும் - அணிவிடையார்

கசச. காமன்பான் முன்சேந்த கண்போல மூர்த்தியார்
தாமன்பான் முன்சேர்த்த சந்தனமும் - பூமன்போற்

கசரு. காக்கு மரிபுனைந்த கண்மலருங் காதலெறிடு
சாக்கியர்தாஞ் சாத்தியபூந் தண்மலரும் - போக்கியமா

கசசு. ஆக்கிய மாற னமுதுஞ் சிறுத்தொண்டர்
மாக்கறியுந் தாயர்தரு மாவடுவும் - நீக்கரிய

கசஎ. காரா ரிரவிற் கணம்புல்லர் தம்முடிமேற்
சீராக வேற்றியசெந் தீபமும் - ஆரால்

கசஅ. அமைத்து வணங்கலுறு மங்கணார்க்குப் பூசை
சமைத்து வணங்கத் தகுமோ - உமைக்கன்பர்

கசகூ. அற்சனைபாட் டேயாமென் றாரூரர்க் காதியிலே
சொற்றமிழ் பாடுகெனச் சொன்னமையாற் - சொற்படியே

---

கசச. கண் - அக்கினி. சந்தனமென்றது கையையரைத்ததனுலுண்டாகிய இரத்தக்குழம்பை.

கசரு. திருமால் கண்மலரைப் புனைந்தது சக்கராயுதம் பெறும் பொருட்டு. சாக்கியர் - சாக்கிய நாயனார். பூந்தண் மலரென்றது அவர் எறிந்த கல்லாகிய மலரை. போக்கியமா - உண்பதற்குத் தகுதியாக.

கசசு. மாறன் - இளையான்குடிமாற நாயனார். தாயர் - அரிவாட்டாய நாயனார்.

கசஎ. முடி - மயிர்முடி.

கசஎ - அ. ஆரால் அமைத்து வணங்கலுறும் - யாராற் செய்து வணங்குதற்கு இயலும்? ஒருவராலும் இயலாதென்றபடி.

கச0-சஅ. இவற்றில் பூசல் நாயனார் முதலியவர்களுடைய செயற்கரிய செயலாலமைந்த கோயில் முதலியன கூறப்பட்டன.

கசகூ. ஆரூரர் - சுந்தரமூர்த்தி நாயனார். "மற்றுநீ வன்மை பேசி வன்றொண்ட னென்னு நாமம், பெற்றனை நமக்கு மன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அற்சனை பாட்டே யாகு மாதலான் மண்மே னம்மைச், சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" (பெரிய. தடுத்தாட். 70) என்பது இங்கே அறியற்பாலது.

௧௫௦. செய்தாய்நால் வேதந் திகைத்தொதுங்கப் பித்தனென்று
வைதாய்நீ வைதாலும் வாழ்த்தாமே - மெய்தான்

௧௫௧. இருந்தமிழே யுன்னா லிருந்தே னிமையோர்
விருந்தமிழ்த மென்றாலும்வேண்டேன் - வருந்தினன்மால்

௧௫௨. வெல்லானை தின்ற விளங்கனியா னேன்விரகக்
கல்லானை தின்ற கரும்பானேன் - நல்லவரைத்

௧௫௩. தேடுநிழற் சிந்தனையிற் றேம்பினேன் வெம்பனியால்
வாடிய செந்தா மரையொத்தேன் - ஓடமிசைக்

௧௫௪. கொள்ளம்பூ தூர்வெள்ளக் கொள்ளைகடந் தாயென்மால்
வெள்ளங் கடத்திவிட வேண்டாவோ - தள்ளென்று

---

௧௫௦. பித்தனென்று வைதாயென்றது, "பித்தாபிறை சூடி" என்ற தேவாரத்தை நினைந்து.

௧௫௧-௨. மால் வெல் ஆனை - காமமயக்கமாகிய வெல்லும் யானை. ஆனை யென்றது விளங்கனிக்கு வருவதொருநோயை; ஆனை தின்ற விளங் கனி: "களிறுண்ட வெள்ளில்போன் றுள்ளம் வெறிது" (௧௧ - ஆம். கபில. சிவ. 19); "தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்", "வெஞ்சின வேழ முண்ட வெள்ளிலின் வெறிய மாக," "வெஞ்சின வேழ முண்ட விளங்கனி போன்று" (சீவக. 232, 1024, 1122.) விரகக் கல்லானை - விரகமாகிய கல்லானை; விரகம் - பிரிவு. கல்லானைக்குக் கரும்பருத்தியது, சோமசுந்தரக் கடவுளின் திருவிளை யாடல்களில் ஒன்று.

௧௫௨-௩. நல் அவரைத் தேடுநிழல் சிந்தனையில் - நல்ல அவரைக் கொடி படர்ந்த பந்தரின் தேடிய நிழலிலுள்ளார் அறிவுபோல; அவரை நிழலில் இருப்பவர்களின் அறிவு தேயுமென்பது ஆயுள் நூற்றுணிபு; "உனை விட்டு மற்றொன், றெண்ணு தவரை நிழற்பாற் பயிலினு மென்மனமே" (திருக்குடந்தைத் திரிபந்தாதி, 70); வடமொழி நைஷத நூலாசிரியர் சரிதத்தாலும் இது விளங்கும். வெம்பனியால் வாடிய செந்தாமரை: "தாமரை முகங்கள் வாட்டுந் தண்பனி" நைடதம்.

௧௫௪. கொள்ளை - மிகுதி. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கொள்ளம் பூதூருக்கெழுந்தருளுகையில், "கொட்டமே கமழும்" என்னும் திருப்பதிகம் பாடி ஆற்றுவெள்ளத்தைக் கடந்த செய்தியை இக் கண்ணி குறிப்பிடுகின்றது.

௧௫௫. மாறிட்ட சாக்கியரை வன்கழுவே றச்செய்தாய்
சீறிட்ட வேலையது செய்யாயோ - நீறிட்டே

௧௫௬. அங்கரும்பின் கூனொழித்தா யன்றுவழு திக்குமதன்
செங்கரும்பின் கூனொழியச் செய்யாயோ - அங்கமுறு

௧௫௭. வெப்புநோய் தீர்த்தாயவ் வேந்தனுக்கென் வெவ்விரக
வெப்புநோய் தீர்க்க விரும்பாயோ - தப்பலவே

௧௫௮. சாக்கிய ரிட்டநஞ்சு தன்னையமு தாக்கினையின்
றாக்கிய நஞ்சையமு தாக்காயோ - நீக்கரிய

௧௫௯. வெந்தீக்குள் ளேகிடந்தும் வேவாயென் பார்காமச்
செந்தீச் சுடா திருக்கச் செய்யாயோ - வந்துகொங்கில்

௧௬௦. அப்பனியால் வாடாதே யார்க்குந் துயரொழித்தாய்
இப்பனியால் வாடா திரங்காயோ - அப்பரை

---

௧௫௫. சாக்கியரென்றது இங்கே சமணரை; பௌத்தர்களுடைய பெயராகிய இது சமணருக்கும் வழங்கும்; "சாக்கிய ரிட்டநஞ்சு" (158); "சாக்கியப் பேயமண், டெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே" (திருஞா. தே.) அது - கழுவேறச் செய்தல்.

௧௫௬. அங்கு அரும் பின் கூன்; பின்கூன்-முதுகின்கண்ணுள்ள கூன். வழுதிக்கு - கூன்பாண்டியனுக்கு. வழுதிக்குக் கூன் ஒழித்தாய். கரும்பின் கூன் - கருப்புவில்லின் வளைவை. அங்கமுறு - பாண்டியன் உடம்பிலுற்ற.

௧௫௭. வெப்புநோய் - சுரநோய். அவ்வேந்தனுக்கு - கூன்பாண்டியனுக்கு. விரகமாகிய வெப்பு நோயை.

௧௫௮. சாக்கியரிட்ட நஞ்சு - திருநாவுக்கரசு நாயனாருக்குச் சமணர் பாலோடு ஊட்டியவிடம்; பெரிய. திருநா. 103-4. ஆக்கிய நஞ்சை - சமைத்த உணவாகிய விடத்தை; விரகிகளுக்கு உணவு விடமாக விருக்கு மென்பர்.

௧௫௯. காமத்தீ சுடுதல்: "ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து முயலாகும் - நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி, ஒளிப்பினுங் காமஞ் சுடும்" (நாலடி. 90); "தொடிற்சுடி னல்லது காமநோய் போல, விடிற்சுட லாற்றுமோ தீ" (குறள். 1159); "நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும், சாரச் சார்ந்து, தீரத் தீரும், சாரனு டன் கேண்மை, சாரச் சாரச் சார்ந்து, தீரத் தீரத் தீர்பொல் லாதே" பழையசெய்யுள்.

இக்கண்ணியிற் குறிப்பிட்டது, சம்பந்தமூர்த்தி சமணர் முன்னே நெருப்பிலிட்ட பதிக ஏடு வேவா திருந்ததை.

௧௫௯-௬௦. கொங்கில் - கொங்குநாட்டிலுள்ள திருச்செங்கோட்டில். துயரொழித்தாயென்றது, "அவ்வினைக் கிவ்வினை" என்னும் பதிகத்தை நினைந்து.

கசுக. மைக்கடல்கொல் லாதபடி வன்கல் மிதப்பித்தாய்
அக்கடல்கொல் லாமலுற வாக்காயோ - மிக்குயர்ந்த

கசுஉ. மன்றிற் பனைவடிவ மாற்றினா யப்பனைமேல்
அன்றிற்புள் வேறொருபுள் ளாக்காயோ - தொன்றுதொட்டுத்

கசுந. தென்பொதியிற் சாந்தினொடு தென்றலுற வாய்வந்தாய்
அன்புறவென் னோடுமுற வாக்காயோ - முன்பிருந்து

கசுச. பாடுமிசை யெல்லாமுன் பாவையராச் சேர்ந்தாயென்
னோடுமுனி யாதிருக்க வோதாயோ - பாடலாற்

கசுரு. சின்னமொடு காளஞ் சிவிகைபந்தர் முத்தடைந்தாய்
பொன்னே சுடாதணியப் பூட்டாயோ - முன்னிறந்தாள்

கசுசு. அங்கத்தைப் பூம்பாவை யாக்கினா யாதலினென்
அங்கத்தைப் பூம்பாவை யாக்காயோ - மங்கத்தான்

---

கசுக. வன்கல்மிதப்பித்தாயென்றது, "சொற்றுணை வேதியன்" என்னும் பதிகத்தைக் குறித்து.

கசுஉ. மன்று - பொதுவான இடம். மாற்றினாயென்றது ஆண்பனை பெண்பனையாகச்செய்த பதிகத்தை. தொன்று - பழமை.

கசுந. சாந்து - சந்தனம். சாந்து தென்றல் தமிழ் மூன்றும் பொதியிலில் உள்ளனவாதலின், சாந்தினொடு தென்றலுறவாய் வந்தாயென்றார்; "அமுதுறழ் தமிழொண் முத்த மையசந் தனமெல் வாசம், கமழ்குளிர் தென்ற லென்று கரையரும் பொருள்ப டாமல், இமிழ்கடல் வரைப்பெ லாந்தோன் றெண்பொருள் படுநா டெள்ளித், தமிழ்முதல் பிறக்கு நாடாய்த் தயங்குமாற் பாண்டி நாடு" (**சீகாளத்திப்**. நக்கீரச். 1) என்பதனாலும் அம்மூன்றும் உறவாயிருத்தல் உணரப்படும். உறவாக்காயோ என்றது சந்தனத்தையும் தென்றலையும் தன்னோடு உறவாக்க வேண்டுமென்றபடி.

கசுச. உனக்கு மனைவியாகவுள்ள இசைகளை என்னோடுறவாயிருக்கும்படி சொல்வாயாக வென்பது கருத்து; இசைகளை மனைவியராகக் கொண்டா யென்றார் முன்னும்; ருக. பாடலால் - தேவாரத்தால்.

கசுரு. திருஞான சம்பந்தர் முத்தினாலாகிய சின்னம் காளம் சிவிகைமுதலியவை திருவரத்துறையிலும், பந்தர் திருப்பட்டீச்சரத்திலும் பெற்றமை இங்கே அறியற்பாலது. சுடாதணிய - அம்முத்தமாலை என்னைச்சுடாதபடி அணிந்துகொள்ள.

கசுசு. அங்கத்தை - எலும்பை. பூம்பாவை - பூம்பாவையென்ற பெண்ணை. ஆக்கியவர் ஞானசம்பந்தர். என் அங்கத்தை - பொலிவழிந்திருக்கும் என் உடம்பை. பூம்பாவை - அழகிய பாவைபோன்ற வடிவமாக. மங்க - குறைய.

கசுஎ. மாய்ந்தாலு மாமுதலை வாய்ப்பிள்ளை யைப்படைத்தாய்
மாய்ந்தாலும் பின்படைக்க வல்லையே - ஏய்ந்தவுரை

கசுஅ. செய்தாளென் றென்சொல் செவியோர்ந்து செல்வாயிங்
கெய்தாம லங்கிருக்க வெண்ணாதே - பொய்தீரத்

கசுகூ. தேசிவருஞ் சொக்கருக்கே சென்றிருந் தாங்கவரைப்
பேசிவருந் தூது பிறிதுண்டோ - நேசமொடு

கஎ0. தைவரினுங் காட்டத் தகாதாரைத் தாதையர்க்குக்
கைவிரலாற் காட்டியருள் காளையும் - தெய்வவெள்ளிப்

கஎக. பூதர வானவரைப் போற்றமுயன் றையாற்றில்
ஆதரவாய்க் கண்ட வரசரும் - நாதர்

கஎஉ. அளந்தருள்செம் பொன்னைமணி யாற்றிலிட் டாரூர்க்
குளந்தனிலே தேடியருள் கோவும் - வளந்திகழும்

கஎங. காளத்தி யில்வந்த காட்சிகயி லாயத்து
நீளத்தான் சொற்றவனும் நீயன்றோ - கேளப்பால்

கஎச. அம்மைதமக் கில்லாதா ரம்மைதா மாவிருந்தார்
அம்மையென்று முன்னுரைத்த வம்மையாய்த் - தம்மெதிரே

கஎரு. வெள்ளானை மேற்கொண்ட வேந்தர் வரவிடுத்த
வெள்ளானை மேற்கொண்ட வித்தகராய்த் - தள்ளாது

---

கசுஎ. படைத்தவர் சுந்தரமூர்த்தி நாயனார். மாய்ந்தாலும் - யான் இறந்தாலும். வல்லை - வல்லமையுடையாய்.

கசுகூ. தேசு இவரும் - ஒளி பரந்த. சொக்கருக்கு - சொக்கரிடத்தில்.

கஎ0. தகாதாரை - சிவபெருமானை. காளை - திருஞானசம்பந்தர்.

கஎ0-எக. வெள்ளிப்பூதரம் - கைலையங்கிரி. அரசர் - அப்பர்.

கஎஉ. மணியாறு - திருமணி முத்தாறு. ஆரூர்க்குளம் - திருவாரூரிலுள்ள கமலாலயமென்னும் தேவதீர்த்தம். கோ - சுந்தரமூர்த்தி நாயனார்.

கஎங. சொற்றவன் - நக்கீரர்.

கஎச. தமக்கு அம்மை இல்லாதார் - தமக்குத் தாயில்லாதார். அம்மை தாமா இருந்தார் - திரிசிரகிரியில் தாமே தாயாக இருந்தவர்; "ஆவியாய், அத்தனு மாவதன்றி யன்னையுந்தா னயபிரான், சித்த மகிழ் தென் சிரகிரியான்" (திரிசிரகிரியுலா.) அம்மையாய் - காரைக்காலம்மையாகி.

கஎரு. வெள் ஆனை - வெள்ளிய ரிஷபத்தை. வேந்தர் - சிவபெருமான். வித்தகர் - சுந்தரமூர்த்திநாயனார்.

கஎசு. விஞ்சுவரால் வண்ணானை வெண்ணீற்ற ரென்றுபணிந்
தஞ்சலிசெய் தாட்செய்த வன்பராய்ச் - சஞ்சரியாத்

கஎஎ. தென்கையி லாயவரைச் செல்வர்பாற் சென்றுயே
உன்கையி லாகாத தொன்றுண்டோ - என்கையால்

கஎஅ. ஆயு மவளபாகத் தன்பரு முக்கிரராம்
சேயும் புரந்திருக்குந் தென்மதுரை - வாயினிய

கஎகூ. செவ்வழியே செல்வாய்நீ செல்வழியி னல்வழிதான்
எவ்வழி யென்று வியம்பக்கேள் - எவ்வழியும்

கஅ0. வெல்வா யுனைநினைந்து வேயுறு தோளியென்று
செல்வார்தங் காரியஞ்சித் திக்குமே - செல்வாய்

கஅக. தடையுண்டோ வையாறு தன்னிலே பொன்னி
இடைவிலங்கச் சென்றதறி யேனோ - இடையிலே

கஅஉ. பாலைநில நெய்தலாப் பண்ணினு யின்னுமதைச்
சோலைநில மாக்குவைநான் சொல்லுவதென் - மேலானூர்

கஅந. கூறும் பொதிசோறு கொண்டு வரினுனக்கு
வேறும் பொதிசோறு வேண்டுமோ - வீறுகக்

கஅச. கற்பார் பொருள்காணூர் காசுபணங் காணினுனை
விற்பா ரவர்பானீ மேவாதே - கற்றுரை

---

கஎசு. விஞ்சு உவரால் - மிக்க உவர்மண்ணினால். அன்பர் - சேரமான்பெருமாணாயனார். சஞ்சரியா - சஞ்சரித்து.

கஎஎ. என்கையால் - என்று நீ புகழ்ந்து பாராட்டப்படுகையால்.

கஎஅ. ஆயும் - தடாதகைப்பிராட்டியாரும். அன்பரும் - சோமசுந்தரக் கடவுளும்.

கஎகூ. செவ்வழி - நல்லவழி.

கஅ0. "வேயுறுதோளி" என்றது கோளறு பதிகத்தின் முதலை.

கஅக. சென்றது - சுந்தரமூர்த்தி நாயனார் எழுந்தருளியது.

கஅஉ. பண்ணியவர் திருஞானசம்பந்தர்; பண்ணிய இடம் திருநனிபள்ளி; திருக்களிற்றுப். 12. அதை - பாலையை. மேலானூர் - சிவபெருமான்.

கஅந. பொதிசோறு கொண்டு வந்தது திருப்பைஞ்ஞீலிக்கு எழுந்தருளும் அப்பருக்காக.

கஅரு. எள்ளிடுவார் சொற்பொருள்கேட் டின்புறூர் நாய்போலச்
சள்ளிடுவார் தம்மருகே சாராதே - தெள்ளுதமிழ்ப்

கஅசு. பாயிரமுன் சொன்ன படிபடியா மற்குழறி
ஆயிரமுஞ் சொல்வார்பா லண்டாதே - ஆய்தருநூல்

கஅஎ. ஓதி யறியாத வொண்பே தையருடனே
நீதி முறையா நிகழ்த்துநூல் - பேதைமையாம்

கஅஅ. காணுதாற் காட்டுவான் ருன்காணுன் கண்ணெதிரே
நாணு திராதே நவிலாதே - வீணுக

கஅகூ. ஆற்றி னளவறிந்து கல்லா தவையஞ்சும்
கூற்றினர்பா லேகாதே கூடாதே - போற்றுரை

ககூ0. வேண்டாதே கேடில் விழுச்செல்வங் கல்வியென்று
பூண்டாய்நீ தானே பொருளன்றே - ஆண்ட

---

கஅரு. எள்ளிடுவார் - இகழ்வார். சள்ளிடுவார் - குரைப்பார்; "ஒன்றுக்கொன் றுறுமிச் சள்ளிட் டிரும்பசியா லிகல் செய்து......புகுந் தவன்றே" திருவால. 29:2.

கஅசு. பாயிரமுன் சொன்னபடியாவது மாணுக்கன் நூல்கேட்கும் முறை. அண்டாதே - அணுகாதே.

கஅஎ. ஒண்பேதையர் - மூடர்களிற் சிறந்தோர்; "மூடரை யெண்ணுங்கான் முந்தி நிற்பரே" என்றுர் பிரபுலிங்கலீலையுடையாரும்.

கஅஅ. "காணுதாற் காட்டுவான் ருன்காணுன் காணுதான், கண்டானுந் தான்கண்ட வாறு" (குறள். 849.) நாணுதிராதே - நாணியிருந்துவிடு; இங்கே, "பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்ருேர், முசுப்போல முள்காந் திருப்பார் - பசுத்தான், வெருளினு மெல்லாம் வெருளுமஃ தன்றி, மருளினு மெல்லா மருண்ம்" என்ற அரிய பழைய செய்யுள் ஞாபகத்திற்கு வருகின்றது. நவிலாதே - பேசாதே; பேசினுல் துன்புறுவாயென்றபடி; "வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார், கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ-டொன்றி, உரைவித் தகமகிழ்வார் காண்பவே கையுட், சுரைவித்துப் போலுந்தம் பல்" (நாலடி. 315) என்பது இக்கருத்தை வலியுறுத்தும்.

கஅகூ. "ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா, மாற்றங் கொடுத்தற் பொருட்டு" (குறள். 725) என்பது இக்கண்ணியின் பொருளை விளக்கும்.

ககூ0. வேண்டாதே - திரவியத்தை விரும்பிக்கேளாதே; "கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்ற யவை" குறள். 400.

கககக. வல்வா நலவா வடுதுறையி னுன்போல்
உலவாக் கிழிபெற்று ருண்டோ - நிலவிருப்ப

ககஉ. தாக்கவரு செங்கலைப்பொன் னாக்கினாய் மண்முழுதும்
மாக்கனக மாக்கிவிட வல்லையே - நோக்குபுகார்

ககங. பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டாற் பதினாறு
கோடிபொன் கொண்டதுநின் கொற்றமே - தேடியருள்

ககச. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்டதிருக் கண்டாயே - கல்லார்பால்

ககரு. ஏகாதே யன்பிலா ரிந்திரன்போல் வாழ்ந்தாலும்
போகாதே யங்கே புசியாதே - மாகவிஞர்

ககசா. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தாரென்னும் - மாமகிமை

ககஎ. சேர்ந்ததுன்பா லன்றோ திருப்பாற் கடலமுதம்
ஆர்ந்தவர்க்கல் லாதுபசி யாறுமோ - சேர்ந்துன்னை

ககஅ. நம்பாதார் வீதி நணுகாதே நல்லார்கள்
தம்பா லிருந்து தரித்தேகி - வம்பாகப்

---

கககக. வலவா - அரசனே. நல ஆவடு துறையில் - நல்ல திருவாவடுதுறையின்கண். உலவாக்கிழிபெற்றவர் திருஞானசம்பந்தர்; "கழுமல வூரர்க் கம்பொன், ஆயிரங் கொடுப்பர் போலு மாவடு துறைய னாரே" (திருநா. தே.) உலவாக் கிழி - கேடில்லாத பொன்முடிப்பு.

கககக-உ. நல்ல இருப்பது ஆக்க - நல்ல திருக்கோயிலைக் கட்டுதற்காக. செங்கல்லைப் பொன்னாக்கியது திருப்புகலூரில்.

ககஉ. வல்லை - வன்மையுடையாய். புகார் - காவிரிப்பூம் பட்டினம்.

ககஉ-ங. புகார் பாடியதோர் வஞ்சிநெடும்பாட்டு - பட்டினப் பாலை; "பட்டினப் பாலையென்னும் வஞ்சிநெடும்பாட்டு" (யா. வி. செய். சூ. 37, உரை; யா. கா. ஒழிபு. 4, உரை; இ. வி. சூ. 745, உரை); "பாடிய பாக்கொண்டு பண்டு பதினாறு கோடி பசும்பொன் கொடுத் தோனும்" (சங்கர சோழனுலா, 10); "தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன், பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப் பண்டு பட்டினப் பாலை கொண்டதும்" என்பர் கலிங்கத்துப்பரணியுடையார். கொற்றம் - அரச உரிமை.

ககச. "நல்லார்கட் பட்ட...திரு" குறள். 408.

ககசா. "தாமின் புறுவது ...கற்றறிந்தார்" குறள். 399.

ககஎ. பசி ஆறுமோ வென்றது அமுதம் உண்டார்க்குப் பசி முற்றும் நீங்கு மென்பதைக் குறிப்பித்தபடி.

ககஅ. நம்பாதார் - விரும்பி மதியாதவர்; "மதியாதார் முற்ற மிதித்தொருகாற் சென்று, மிதியாமை கோடி பெறும்" என்பதை இக் கண்ணி நினைப்பிக்கின்றது. வம்பு - புதுமை.

கக்கூ. பின்போ யமனோடைப் பேர்ந்தோடும் வையையிலே
முன்போ யெதிர்போய் முழுகியே - அன்போடே

உ00. தாழ்ந்துநீள் சத்தந் தனைக்கற்று றுள்ளம்போல்
ஆழ்ந்த வகழி யகன்றுபோய்ச் - சூழ்ந்துலகின்

உ0க. மேன்மே லுயர்ந்தோங்கு வேதம்போன் மேலாக
வான்மே லுயர்ந்த மதில்கடந்து - போனால்

உ0உ. மிருதிபுரா ணங்கலைபோல் வேறுவே றாக
வருதிரு வீதிசூழ் வந்தே - இருவினையை

உ0ந. மோதுஞ் சிவாகமம்போன் முத்திக்கு வித்தாக
ஓதுந் திருக்கோயி லுட்புகுந்து - நீதென்பால்

உ0ச. முன்னே வணங்கி முறையினபி டேகமுனி
தன்னையம் போலாந் தளவிசையும் - தன்னடைந்து

உ0ரு. தேறும் படிவர் சிவலோகஞ் சேர்ந்திருக்க
ஏறும் படிநிறுத்து மேணிபோல் - வீறுயர்ந்த

உ0சு. கோமேவு கோபுரமுங் கூடலின்மேன் முன்னொருநான்
மாமேகஞ் சேர்ந்ததுபோன் மண்டபமும் - பூமேவும்

---

கக்கூ. யமனோடைப் பேர்ந்தோடும் வையை யென்றது வையையில் மூழ்கினோர் யமவாதை நீங்குவாரென்றபடி.

உ00. சத்தந்தனை-இலக்கண நூலை ; "சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும், பித்தரிற் பேதையா ரில்" (நாலடியார், 52); "பிரயோக விவேகமென்னும் வடமொழிச்சத்தசாத்திரத்தை" பிரயோக. க-றை. க.

உ0க. மதிலுக்கு வேதம் உவமை : "மேவரு முணர்வு முடிவிலா மையினால் வேதமு மொக்கும்" கம்ப. திருநகர. 9.

உ0உ. மிருதி=ஸ்மிருதி - தர்மசாஸ்திரம்.

உ0ச. தன் அடைந்து - தன்னை அடைந்து. அபிடேகமுனி : விறலிவிடு. 955.

உ0ரு. படிவர் - தவவேட முடையோர்.

உ0சு. நான்மா மேகஞ்சேர்ந்தது - நான்கு மேகங்கள் நான்கு மாடங்களாக ஆகியது ; "அம்புத நால்களா னீடுகூட லாலவா யின்கணமர்ந்த வாறே" (தே.) இச்செய்தி நான்மாடக்கூடலான திருவிளையாடலாலறியப்படும்; "நான்குமாடம் கூடலின் நான்மாடக் கூடலென்றாயிற்று ; அவை திருவாலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் ; இனி, கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்றுமாம்" (கலி. 92, ந.) என்பதனால் நான்மாடங்கள் இன்னவை யென்பது விளங்கும் ; மதுரைக்காஞ்சி, 429-ஆம் அடி உரையின் அடிக்குறிப்பாலும் இஃது அறியப்படும். உ0ரு-சு. கோபுரத்திற்கு ஏணி உவமை.

உ0எ. மட்டளையும் வண்டெனப்போய் மாளிகைப் பத்தியறைக்
கட்டளையுங் கண்டு களிகூர்ந்தே - இட்டமணிச்

உ0அ. சிங்கா தனத்திற் சிறந்ததிரு வோலக்கம்
எங்கா கிலுமொருவர்க் கெய்துமோ - பைங்கழல்சூழ்

உ0கூ. தேங்கமலத் தேசு தெரிசனஞ் செய்தவர்க்கே
பூங்கமலக் கண்கொடுத்த புத்தேளும் - ஓங்கமல

உகO. மையி லடியில் வணங்காத் தலையொன்றைக்
கையி லளித்த கடவுளும் - மொய்யிழந்த

உகக. மானந் தனக்கு வகுத்தகடம் பாடவிக்கு
மானந் தனைவகுத்த வானவனும் - தேனங்

உகஉ. கணிமலர்த்தா ணெஞ்சூ டழுத்தியழுத் தாதே
மணிமுடிக ணீக்கி வணங்கக் - கணநாதர்

உகங. ஓதுதுனி யோடுசின முற்றபகை செற்றமுரட்
போத முனிவர் புடைசூழத் - தீதில்

உகச. அரிய திசைப்பால ரத்தமுத ருங்கித்
தெரிசனக்கண் பார்த்தேவல் செய்யப் - பரவியே.

---

உ0எ. மட்டு - தேன்.

உ0அ. திருவோலக்கம் - அரசிருக்கை. எய்துமோ: ஓகாரம் எதிர்மறை.

உ0அ-கூ. பைங்கழல் சூழ் தேங்கமல மென்றது இறைவன் திருவடிகளை.

உ0கூ. அவர்க்கு - சிவபெருமானுக்கு. புத்தேள் - திருமால். கண் கொடுத்தது சக்கராயுதம் பெறற்பொருட்டு.

உ0கூ-கO. அமல அடி, மையில் அடியென்க. கடவுள் - பிரம தேவன். மொய் - வன்மை.

உகக. மானம் - பெருமை. கடம்பாடவிக்கு - கடம்பாடவியின் கண்; கடம்பாடவி யென்பது மதுரையின் பழைய திருநாமம். மானந் தனை - விமானத்தை. வானவன் - இந்திரன்; இதனால் இவ்விமானம் இந்திரவிமானமென்று வழங்கும்.

உகஉ. அழுத்தாதே - திருவடியை அழுத்தாதபடி.

உ0கூ-கஉ. புத்தேளும் கடவுளும் வானவனும் வணங்க எனக் கூட்டுக.

உகஉ-ங. கணநாதரும் முனிவரும் புடைசூழ.

உகச. திசைப்பாலர் - இந்திரன் முதலிய எண்மர். அத்தம் முதல் - கண்ணாடி முதலியவற்றை. கண்பார்த்து - திருவிழிக்குறிப்பை நோக்கி.

உகரு. முன்னிருவ ரெண்மரொடு மொய்த்த பதினொருவர்
பன்னிருவர் நின்று பணிசெய்ய - முன்னே

உகசா. நதிக ளெனக்கண்டு நந்திபிரம் போங்க
உதகவிரு பாலி னொதுங்கிப் - பதினெண்

உகள. குலத்தேவர் தம்மகுட கோடிபதி னெட்டு
நிலத்தோர் முடியா னெரிய - நிலத்தே

உகஅ. செருக்குஞ் சினேகமுற்ற தேவி யுடனே
இருக்குஞ் சினகரத்து ளெய்திப் - பொருக்கெனப்போய்

உகக. எந்தாயென் றேத்து மிடைக்காடன் பின்போன
செந்தா மரைபோற் றிருத்தாளும் - வந்துமனம்

உஉ0. தேறிக் கழுத்தரியத் தென்பாண்டி நாடனுக்கு
மாறித் திரும்பு மணிக்குறங்கும் - சீறிப்

---

உகரு. இருவர் - அச்சுவினி தேவர்கள். எண்மர் - அட்டவசுக்கள். பதினொருவர் - ஏகாதச ருத்திரர்கள். பன்னிருவர் - துவாதசாதித்தர்.

உகசா. திருக்கூட்டத்தை நதிகளெனக்கண்டு விலக்குவதற்காகத் திருநந்தி தேவர் தம் திருக்கரத்திலுள்ள பிரம்பையோங்க. உதகவிருபாலின்-வெள்ளம் இருபக்கத்தில் ஒதுங்குவதுபோல்.

உகசா-எ. பதினெண்குலத்தேவர் - பதினெட்டுத்தேவகணத்தார்; "பதினெண் கணனு மேத்தவும் படுமே" (புறநா. கடவுள்.) பதினெட்டு நிலத்தோர் - பதினெட்டு மொழிகளுக்குரிய நிலத்தின் அரசர்களுடைய. மகுடகோடி நெரியவென இயைக்க.

உகஅ. தேவியுடனே - அங்கயற்கணம்மையோடு. சினகரத்துள்- கோயிற்குள்.

களிகூர்ந்து (உ0எ), எய்தி (உகஅ) யென்க.

உகக. இது முதல் உஙா0-ஆவது கண்ணி வரையில் திருவடி முதலியவற்றைக் கூறுதல் முகமாகச் சொக்கநாதருடைய அருட்பெருஞ்செயல்கள் பாராட்டப்படுகின்றன.

இக்கண்ணியிலுள்ள வரலாறு இடைக்காடன் பின்போன திருவிளையாடலால் அறியப்படும்.

உஉ0. கழுத்தரிய - கழுத்தை அரிந்துகொள்ளத் தொடங்க. பாண்டி நாடனுக்கு - ஒரு பாண்டிய அரசன் பொருட்டு. மாறி - இடக்காலை ஊன்றி வலக்காலை உயர்த்தி. குறங்கு - துடை.

௨௨௧. பணிக்கற்கு மாறுப் படையுடைவாள் சேர்த்து
மணிக்கச் சுடுத்த மருங்கும் - துணிக்கமையத்

௨௨௨. தொண்டுபடு வந்தி சொரிந்திடும்பிட் டள்ளியள்ளி
உண்டுபசி தீர்ந்த வுதரமும் - அண்டுமொரு

௨௨௩. தாய்முலைப்பா லுண்டறியாத் தாம்பன்றிக் குட்டிகளின்
வாய்முலைப்பா லூட்டியபூண் மார்பமும் - தூயமுடி

௨௨௪. ஆணிக் கனகத் தழுத்த வழுதிக்கு
மாணிக்கம் விற்ற மலர்க்கையும் - காணிக்காப்

௨௨௫. பூம்படலை யாத்திப் புனைமலரைப் பூணுமல்
வேம்பலரைப் பூண்ட வியன்புயமும் - ஓம்புகொடி

௨௨௬. வாதிற் கரிக்குருவி வாழ்தற் குபதேசம்
காதிற் புகன்ற கனிவாயும் - தீதில்சொல்

---

௨௨௧. பணிக்கன் - யுத்தமுறையைக் கற்பிப்பவன்; "பண்புடையா னொருபணிக்கன்", "தீதிலா வினிமைதரு முயர்பணிக்கன்", "கோதிலா மனப்பணிக்கன்" (திருவால. 35 : 1, 3, 14); இச்செய்தி அங்கம் வெட்டின திருவிளையாடலால் அறியலாகும். துணி - துண்டிக்கப்பட்ட பழைய உடை; "அழுக்கடைந்த பழந்துணியொன் றரைக்கசைத்து" (திருவிளை.); "உருகிய மனமொடு தழுவியொர் கிழவி கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன" **மதுரைக்கலம்பகம்.**

௨௨௨. வந்தி - பிட்டுவாணிச்சி; அவள் பெயர் செம்மனச்செல்வி யென்பர், திருவாதவூரர் புராணமுடையார். இதிற் கூறப்படுஞ்சரிதை மண்சுமந்த திருவிளையாடலிற் காணலாகும்.

௨௨௩. இதிலே உள்ள கதை பன்றிக்குட்டிகளுக்குத் தாயான திருவிளையாடலால் அறியலாகும். முடி - கிரீடத்திலுள்ள.

௨௨௪. ஆணிக்கனகத்து - ஆணிப்பொன்னாலாகிய தகட்டில். வழுதிக்கு - ஒரு பாண்டியனுக்கு. காணி - உரிமை.

௨௨௫. படலை - தழையையுடைய. ஆத்திமலர் சிவபிரானுக்குரியது; "ஆத்தி சூடி யமர்ந்த தேவன்." வேம்புலர் பாண்டியர்க்குரியது; "தோட்டாரும் வேம்பாய்" (௨௫௧.) ஓம்பு - ஒழிக்கின்ற.

௨௨௬. கொடி - காக்கை.

௨௨௫-௬. இதிலுள்ள கதை கரிக்குருவிக்கருள் புரிந்த திருவிளையாடலால் அறியலாகும்.

உஉஎ. வாயிலா நீயிருந்து வாழும் படியுனக்குக்
கோயிலாத் தந்த குழைக்காதும் - பொய்வணிகப்

உஉஅ. பெண்ணீராள் கண்ணீர் பெருகத் தழுவித்தம்
கண்ணீரா லாற்றியருள் கண்களும் - தெண்ணீரார்

உஉகூ. பண்சுமந்த பாட்டினுக்கும் பாவைதந்த பிட்டினுக்கும்
மண்சுமந்த சோதி மணிமுடியும் - கண்சுமந்து

உநூ0. கண்டுகளி கூர்ந்து கசிந்துகசிந் துள்ளுருகித்
தொண்டுசெய்து தாண்முடிமேற் சூடியே - மண்டும்

உநூக. உடுக்குலந்தங் கோக்குலமென் றுற்றறிந்தா லென்ன
அடுக்கிலங்கு தீப்மெதி ராகக் - கடுத்திடேல்

உநூஉ. வெங்கதிருண் டுன்குலத்து வெண்மதியுண் டென்னல்போல்
தங்கவா ரத்தீபந் தாமசையத் - துங்கவிடை

---

உஉஎ. வாயில் - வழி. நீயென்றது தமிழை. தமிழுக்குத் தமது திருச்செவியைச் சிவபெருமான் இடமாக்கியது, "சங்கமெங்கள் குழை" (தக்க. 714) என்பதனாலும் அதன் உரை முதலியவற்றாலும் உணரப் படும்.

உஉஎ-அ. மாமனுகவந்து வழக்குரைத்த திருவிளையாடலால் இதிற் கூறப்படும் சரிதை விளங்கும். தெண்ணீரார் - திருவாதவூரடிகள்.

உஉகூ. பாட்டு - திருவாசகம். பாவை - வந்தியென்னும் பிட்டு வாணிச்சி. இக்கண்ணி, திருவாசகத்திலுள்ள, "பண்சுமந்த பாடற் பரிசு" எனவரும் அரிய செய்யுளைப் பின்பற்றி வந்தது.

உநூ0. கண்டு - திருத்தாள் (உககூ) முதலியவற்றைத் தரிசித்து.

உநூக. இனி ஆராதனைக்குரிய தீபங்கள் முதலியன முறையே கூறப்படும்.

உடுக்குலம்-நட்சத்திரக் கூட்டங்கள்; எழுவாய். தங்கோக்குல மென்றது சந்திர குலமாகிய பாண்டிய குலத்தை. அடுக்கிலங்கு தீபம் - அடுக்குத் தீபம். அடுக்குத் தீபத்திற்கு நட்சத்திரங்கள் உவமை.

உநூஉ. வெங்கதிர் - சூரியன். சிவபெருமான் சோழவரசராக இருந்து திருவாரூரில் அரசாட்சி செய்தமையின், 'உன்குலத்து வெங்கதிருண்டு' என்றார்; "நங்குலத்தும் வந்துதித்தார் நாதரென்று பானு மகிழ்ந், தங்குறல்போல்" என்பர் பின்னும்; உநூகூ. உன்குலத் தென்பதனை வெண்மதி யென்பதனுடனும் இயைக்க. தங்கத் தீபம், ஆரத்தீப மென்க; ஆரம் - முத்து. தங்கத் தீபத்திற்கு வெங்கதிரும் ஆரத்தீபத்திற்கு வெண்மதியும் உவமை.

உ௩௩. ஏங்குமொரு மீனுயர்த்தி னெங்கிருப்பே னென்பதுபோல்
ஆங்கிடப தீப ம்மூன்ருட - நீங்கா

உ௩௪. தருடா ம்ருகத்துரு வானோர்க் குவந்தே
புருடா ம்ருகத்தீபம் போற்ற - மருவார்

உ௩௫. வருகுலத்தார் பானு வரனடுக்குற் றென்ன
அருகுலவுந் தட்ட தசைய - இருசுடர்க்கும்

உ௩௬. சொக்கருனைத் தானே சுடரென்று காட்டுதல்போல்
அக்கரா லத்தியொளி யாய்விளங்கத் - தக்கவளோ

உ௩௭. டெற்கும் பயந்தொளித்தா ரென்றுகங்கை தேடுதல்போற்
பொற்கும்ப தீபமெதிர் போய்வளையச் - சொற்குருகும்

உ௩௮. அற்பூரத் தொண்டர்க் கருண்முத்தி யீதெனல்போற்
கற்பூரத் தட்டிற் கனல்வாய்ப்பப் - பொற்பாக

உ௩௯. நங்குலத்தும் வந்துதித்தார் நாதரென்று பானுமகிழ்ந்
தங்குறல்போற் கண்ணாடி யங்கணுற - இங்கரசர்

உ௪0. எங்குலத்தா ராயினு ரென்றுபிறை தோற்றுதல்போல்
துங்கமுடி மேற்குடைவெண் சோதிவிடப்-பொங்கியெழும்

---

உ௩௨-௩. மீன் உயர்த்தின் - மீனக்கொடியை உயர்த்துவாயாயின். விடை எங்கிருப்பேன் என்பதுபோல். இடப தீபம் - ரிஷப தீபம்.

உ௩௪. ம்ருகத்துரு - பன்றியுரு. புருடாம்ருகத்தீபம் - புருஷாமிருக வடிவமுள்ளதீபம்; புருஷாமிருகம் சிவபத்திச் செல்வமிக்கதென்பது மாயூரம், திருமங்கலக்குடி, திருமழபாடி யென்பவற்றின் புராணங்களால் விளங்கும்; இது பற்றியே அதன் வடிவம் சிவபெருமானுக்குத் திருவிழாக் காலங்களில் ஊர்தியாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றது. மருவார் - பகைவர்; இங்கே சோழர்.

உ௩௫. குலத்து ஆர் பானு.

உ௩௬. உனையென்றது தமிழை. அக்கராலத்தி - அட்சர ஆரத்தி. தக்கவள் - உமாதேவியார்.

உ௩௮. அற்பு ஊர் அ தொண்டர்க்கு - அன்பு பரவிய அந்த அடியார்களுக்கு.

உ௩௯. உ௩உ-ஆம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க. அரசரென்றது சோமசுந்தரக்கடவுளை.

உசக. முந்துகடல் வெண்டிரைகண் முன்னேமா மிக்காக
வந்தனபோல் வெண்சா மரையிரட்ட - விந்தைசெயும்

உசஉ. ஆடரவச் சித்தரிவ ராதலினு லாலவட்டம்
நீடரவம் போலவெதிர் நின்றாட - நாடகலா

உசந. வாலநறுந் தென்றனம் மன்னரென்று காண்பதுபோற்
கோல விசிறி குளிர்ந்தணுகக் - காலைத்

உசச. திருவனந்தன் முன்னாகச் சேவிக்குங் காலத்
துருவனந்த தேவ ருடனே - மருவியெதிர்

உசரு. போற்றுவாய் நீயும் புரோகிதரை முன்னனுப்பித்
தோற்றரவு செய்து துதித்ததற்பின் - ஆற்றல்

உசசு. அரிய சிவாகமத்தோ ராதிசைவர் தம்பால்
உரிய படையா வொதுங்கி - அருமையுடன்

உசஎ. மூவர் கவியே முதலாங் கவியைந்தும்
மூவராய் நின்றார்தம் முன்னோதி - ஓவாதே

உசஅ. சீபாத மெண்ணுத தீயவினைப் பாவிசெய்த
மாபாத கந்தீர்த்த மாமருந்தைத் - தீபமணிப்

---

உச0-சக. முந்து எழுகடல் வெண்திரைகள் வந்தனபோல். இதிற் கூறப்படும் சரிதை எழுகடலழைத்ததிருவிளையாடலால் விளங்கும். மாமிக்காக - காஞ்சனமாலைக்காக.

உசஉ. இவர் ஆடுகின்ற அரவத்தையுடைய சித்தர்; எல்லாம் வல்லசித்தர்; சித்தர்கள் செயலில் அரவத்தையாட்டும் செயலும் ஒன்று.

உசந. வாலநறுந்தென்றல் - இளந்தென்றல்; அது பாண்டி நாட்டிற் குரியது; "மதுரைத்தென்றல்" சிலப். 13 : 132.

உசச. திருவனந்தல் - காலைத்தரிசனகாலம்; திருப்பள்ளியெழுச்சி; இது மதுரையில் மிகச்சிறப்புற நடைபெறும். அனந்த தேவருடனே - தேவர் பலருடனே.

உசரு. தோற்றரவு - தோன்றுதல்.

உசசு. உரிய - உரியபொருள்களை. படையா - சேர்ப்பித்து.

உசஎ. மூவர்கவி - தேவாரம். கவி ஐந்து - தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்.

உசஅ. சீபாதம் = ஸ்ரீபாதம் - திருவடிகளை. தீபமணி - விளக்குப் போன்ற மணிகளையுடைய.

உசகூ. பைந்நாகஞ் சூழ்மதுரைப் பாண்டியனே பாரமண்ணிக்
கைந்நாகஞ் சூழ்கோயிற் கண்மணியே - மன்னாக

உ௫௦. மைக்கட் கரும்பை மருவிப் பிரியாத
முக்கட் கனியே முழுமுதலே - மிக்கபுனற்

உ௫௧. கங்கா நதிக்கிறையே கன்னித் துறைக்கரசே
சிங்கா தனத்துரையே செல்வமே - எங்கோவே

உ௫உ. நாடவினை யாடிவந்த நற்பாவை போலடியார்
கூடவினை யாடிவந்த கோமானே - தேடரிய

உ௫௩. சிந்தைமகிழ்ந் தன்புடையார் தேடியநா ளோடியெதிர்
வந்தவினை யாட்டினிமேல் வாராதோ - வந்தருளால்

உ௫௪. பாவும் புகழ்சேர் பழிக்கஞ்சி யென்றுலகில்
மேவும் பெயரினிமேல் வேண்டாவோ - ஆவலினால்

உ௫௫. புக்குவந்தார் தம்மேற் பொடிபோட் டுளமயக்கிற்
சொக்கலிங்க மென்றெவருஞ் சொல்லாரோ - இக்கணைத்த

உ௫௬. அங்கைவே டானே யரசாள வுஞ்சிறிய
மங்கைதனைக் கோட்டிகொளல் வல்லமையோ-கங்கையெலாம்

---

உசகூ. பை நாகம் சூழ் - படத்தையுடைய பாம்பு எல்லை காட்டுதற்குச் சூழ்ந்த. கைந்நாகம் - யானைகள். மன்னாக - அரசாக.

உ௫௦. மைக்கட் கரும்பை - அங்கயற்கண் ணம்மையை.

உ௫௧. இறையே - தலைவனே. கன்னித்துறைக்கு - கன்னியார் குமரித் துறைக்கு. துரை - தலைவன்; "மதுரைத் துரைமகள்" மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், அம்மானைப். 10.

உ௫உ. ஆடிவந்த நற்பாவைபோல் - கண்ணாடிக்குள்ளே தோன்றும் பிரதிபிம்பம்போல; "கையுங் காலுந் தூக்கத் தூக்கும், ஆடிப் பாவை போல, மேவன செய்யும்" (குறுந். 8.); "ஆடிப் பாவையோ டலர் நிழற் பாவை, கைகான் மெய்பிறி தெவையும் பைபயத், தூக்கிற் றூக்கி மேக்குயர் புயர்தல்" ஞானமிர்தம், 6.

உ௫௪. பழிக்கஞ்சியென்பது சோமசுந்தரக்கடவுளின் திருநாமங்களுளொன்று.

உ௫௫. புக்கு உவந்தார். பொடி - சொக்குப்பொடியை. இக்கு - கரும்பு.

உ௫௬. வேள் - மன்மதன். கோட்டிகொளல் - துன்புறுத்தல்.

உ௫எ. நல்லமைக்கண் ணூடுவர நல்குதியே னங்கையெல்லாம்
வல்லசித்த ரென்றழைக்க மாட்டாளே - நல்லவர்போல்

உ௫அ. மைக்குவளைக் கண்ணி வளைகவர்ந்து மங்கையர்தம்
கைக்குவளை விற்கக் கணக்குண்டோ - திக்குவளை

உ௫௯. தோட்டாரும் வேம்பாய்த் தொடர்ந்துதொடர்ந் தேயொருதார்
கேட்டாரும் வேம்பாகக் கேட்டோமே - நாட்டமுற

உ௬0. வேளையெரித் தாய்க்கியல்போ மின்னார் கலைகவர்தல்
காளை யிடையிருந்து கற்றதோ - மீளாது

உ௬க. சென்றிலகு நாரையன்று சென்றசிவ லோகத்தே
இன்றெனையுஞ் செய்தவிட லாகாதோ - அன்றியழற்

உ௬உ. குன்றே விருத்த குமார ரிளம்பாலர்
என்றேயோர் பெண்வீட் டிருக்கலாம் - சென்றொருநாள்

உ௬௩. பொன்னனையாள் வீடும் புகுந்திருக்க லாமெனினென்
பொன்னனையாள் வீடும் பொருந்தாதோ - என்னுமொழி

உ௬௪. ஏல்லாந் திருச்செவியி லேறும் படியுரைக்க
வல்லாயுன் போலெவர்க்கு வாய்க்குமே - நல்லாள்

உ௬௫. கருணைவிழி யாளங் கயற்கண்ணி தன்னோ
டருள்புரிய வாழ்ந்திருக்கு மையர் - திருமதுரை

---

உ௫௬-எ. மைக்கண் ஊடு தங்கையெலாம் வர நல்குதியேல் - அழச்செய்வாயாகில். நங்கையென்றது தலைவியை.

உ௫அ. மை குவளை கண்ணி. கணக்கு - நியாயம்; அக.

உ௫௯. தோள்தாரும் - தோள்மாலையும். வேம்பாக - வெறுக்கத் தக்க பொருளாக.

உ௬0. கலைகவர்தல் இயல்போ. காளையென்றது கண்ணனை; கண்ணன் யமுனைநதியில் ஆய்ச்சியர் கலைகவர்ந்த வரலாறு இங்கே அறியற்பாலது.

உ௬க. நாரைக்கு முத்திகொடுத்தது ஒரு திருவிளையாடல்.

உ௬உ. ஓர் பெண்ணென்றது கௌரியை.

உ௬௩. என் பொன் அனையாள் - என்னுடைய திருமகள் போன்றவளுடைய; என்றது தலைவியை.

உசுசு. தானே சிவராச தானியென்று வீற்றிருந்தால்
தேனேநம் பாக்கியத்தின் செய்தியே - ஆனமையால்

உசுஎ. அந்தரலோ கத்தின்மே லானதிரு வாலவாய்ச்
சுந்தர மீனவனின் சொற்படியே - வந்து

உசுஅ. துறவாதே சேர்ந்து சுகாநந்த நல்க
மறவாதே தூதுசொல்லி வா.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்விடுதூது முற்றிற்று.

---

உசுசு. தேனேயென்றது தமிழை; "புத்திக்கு ளுண்ணப் படுந் தேனே" என்றார் முன்னும்; சுகூ-எ0.

உசுஎ. சுந்தரமீனவன் - சுந்தரபாண்டியர்; "விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே" மதுரைக்கலம்பகம், 3.

விசேடக்குறிப்பு:—இந்நூல் உ0ச-ஆங்கண்ணியிற் கூறப்படும் அபிடேகமுனியென்பவர், விறலிவிடுதூதில், "ஐயர்மகிழ்ந் தேற வபிடேக பண்டாரம், செய்ததிருத் தேர்போலச் செய்தோமோ" (955) என்பதிற் சொல்லப்படும் அபிடேக பண்டார மென்பவர்போலும்.

# ஆராய்ச்சிக் குறிப்பு.

(எண் - கண்ணிகளின் எண்.)

## 1. அரும்பதங்கள்.

அத்தம் - கண்ணாடி, 214.
ஓலைப்பூ - தாழம்பூ, 8.
கணக்கு - நியாயம், 81, 258.
கூடல் - காவிரிப்பூம்பட்டினம், சங்கம், 4.
சத்தம் - இயற்றமிழிலக்கணம், 200.
சள்ளிடுதல், 185.
சாக்கியர் - சமணர், 155.

## 2. இலக்கணப் பகுதிகள்.

### க. எழுத்து.

எழுத்திலக்கணத்தின் பன்னிரு பகுதிகள், 23.
எழுத்தின் பிறப்பு, 20-21.
சார்பெழுத்து இருநூற்று நாற்பது, 22.
முதலெழுத்து முப்பது, 22.

### உ. சொல்.

செந்தமிழ்ச் சொல் நான்கு, 28.
செய்யுட் சொல் நான்கு, 28.
திசைச்சொல் பதினேழு, 37.
பால் ஐந்து, 78.

### ந. பொருள்.

அகத்திணை எழு, 28.
புறத்திணை எழு, 28.

### ச. யாப்பு.

அகவலோசை, 30.
அடி, 79.
கலிப்பா, 81.
சீர் முப்பது, 78.
செப்பலோசை, 30.
செய்யுள், 63-4.
தளை எழு, 79.
துள்ளலோசை, 30.
தூங்கலோசை, 30.
தொடை ௧௬௨௬௫, 113.
நூற்பா, 52.
நேரடி, 99.
பா, 17.
பா ஐந்து, 19.
பா நான்கு, 63.
பாவினம், 63.
பாவினம் மூன்று, 71.
பொருள்கோள் எட்டு, 77.
மருட்பா, 82.
யாப்பிலக்கணப் பகுதி எட்டு, 29.

வண்ணம் நூறு, 74.
வனப்பு எட்டு, 64, 76.
விருத்தம், 83.
வெண்பா, 80.

ரு. அணி.

அக்கரவர்த்தி, 46.
அலங்காரம், 86.
இரதபந்தம், 47.
குணவணி பத்து, 73.
கூடசதுக்கம், 47.
சக்கர பந்தம், 46.
சதுரங்க பந்தம், 48.
சுழிகுளம், 47.
நெறி நான்கு, 65.
பொருளணி முப்பத்தைந்து, 29.
மாலைமாற்று, 48.
முரச பந்தம், 49.
வன்னனைகள் பதினெட்டு, 34, 53.

சு. இசை.

இசைக்கருவி ஐந்து, 31.
நவரசம், 32, 75.
பண் நூற்று மூன்று, 31, 33.

எ. நாடகத்தமிழ், 33.

அ. பிரபந்தங்கள்.

குறம், 71.
சிந்து, 72.
பள், 71.
பிள்ளைத் தமிழ், 26.

கூ. பிறபகுதிகள்.

பாகங்கள் (செய்யுள் நடை), 68.
பொருத்தம் பத்து, 83.

3. இலக்கணப் பிரயோகங்கள்.

சிலேடை, 16, 24-5, 46-49, 73, 83, 87-8, 113-4.
தொனி, 10.
வெளிப்படை, 17-8.

4. எடுத்தாண்ட செய்யுட்களையுடைய நூற்பெயர்கள்.

குறுந்தொகை, 108, 115.
திருக்குறள், 97, 188-90, 194, 196.
திருவாசகம், 132.
தேவாரம், 180.
பெரிய புராணம், 149.

5. சிதைந்த சொற்கள்.

அக்கராலத்தி, 236.
தளவிசை, 204.
வன்னனைகள், 34.

## 6. தலங்களும் ஊர்களும்.

கருவூர், 40.
காவிரிப்பூம்பட்டினம், 58.
திருக்காளத்தி, 173.
திருக்கொள்ளம்பூதூர், 154.
திருநல்லூர், 7.
திருநின்றவூர், 140.
திருவாமாத்தூர், 57.
திருவாரூர், 172.
திருவாவடுதுறை, 191.
திருவேடகம், 126.
திருவையாறு, 171, 181.
மதுரை.
மருவூர், 40.
வேதாரணியம், 127.

## 7. திருவிளையாடல்கள்.

அங்கம் வெட்டியது, 221.
இசைவாது வென்றது, 122-3.
இடைக்காடர்பின்போனது, 119, 219.
இந்திரன் பழிதீர்த்தது, 211.
இரசவாதம் செய்தது, 263.
இறையனாரகப் பொருளியற்றியது, 118.
ஊமைதமிழறிவித்தது, 4.
எல்லாம்வல்லசித்தரானது, 242, 257.
எழுகடலழைத்தது, 241.
கரிக்குருவிக்குபதேசித்தது, 110, 226.
கல்லானைக்குக் கரும்பருத்தியது, 152.
காரியார்நாரியார் பாப்பகுந்தது, 120.
சுந்தரபாண்டியராகியது, 1, 139, 225, 232-3, 235, 240, 243, 249, 251, 259, 267.
தடாதகைப்பிராட்டியார் திக்குவிசயஞ் செய்தது, 2.
தருமிக்குப் பொற்கிழி யளித்தது, 108, 115-6, 130.
நரிபரியாக்கியது, 131.
நாரைக்கு முத்தியளித்தது, 261.
நான்மாடக் கூடலானது, 206.
பலகையிட்டது, 121.
பழிக்கஞ்சியது, 254.
பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்தது, 223, 234.
பாண்டியன் கூன்நீக்கியது, 156-7.
பாணனுக்குத் திருமுகங்கொடுத்தது, 117.
மண்சுமந்தது, 35, 222, 229.
மாணிக்கம் விற்றது, 224.
மாபாதகந் தீர்த்தது, 248.
மாமனாகவந்து வழக்குரைத்தது, 228.
மாறியாடியது, 220.
வளையல் விற்றது, 258.
விருத்த குமார பாலரானது, 262.
விறகு சுமந்தது, 121.

## 8. தெய்வங்கள்.

அசுவினி தேவர்கள், 215.
அட்டவசுக்கள், 215.
இந்திரன், 195, 211.
ஏகாதசருத்திரர், 215.
கண்ணபிரான், 260.
கணநாதர், 212.

கணபதி, 3.
கலைமகள், 92.
காமன், 260.
சிவபெருமான்.
தடாதகைப் பிராட்டியார், 2.
திக்குப்பாலர்கள், 214.
திருநந்தி தேவர், 216.
திருமால், 93, 145, 209.
துவாதசாதித்தர், 215.
பிரமா, 210.
முருகவேள், 4, 94, 178.
யமன், 199.

## 9. நதிகள்.

கங்கை, 141, 237, 251, 256.
காவிரி, 181.
குமரி, 38, 251.
திருமணிமுத்தாறு, 172.
மருதாறு, 40.
வையை, 35, 40, 126, 199.

## 10. நாயன்மார்களும் பிற அடியார்களும்.

அபிடேக முனி, 204.
அரிவாட்டாய நாயனார், 146.
இசை ஞானியார், 104.
இளையான் குடிமாற நாயனார், 146.
ஐயடிகள் காடவர்கோன்நாயனார், 14.
கண்ணப்ப நாயனார், 141.
கணம்புல்ல நாயனார், 147.
காரைக்காலம்மையார், 51, 102, 174.
சிங்கடி, 105.
சிறுத்தொண்ட நாயனார், 146.
சுந்தரமூர்த்தி நாயனார், 6, 100, 105, 149-50, 166-7, 172, 175, 192.
சேரமான்பெருமாள்நாயனார், 14, 54-5, 176.
திருக்குறிப்புத்தொண்ட நாயனார், 142.
திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், 5, 102, 104, 125-6, 154-7, 159-60, 162, 165-6, 170, 191.
திருநாவுக்கரசு நாயனார், 7, 103, 127, 158, 161, 171.
திருமூலநாயனார், 12.
திலதவதியார், 103.
பூசல் நாயனார், 140.
பொய்யடிமையில்லாத புலவர், 13.
மங்கையர்க்கரசியார், 104.
மாணிக்கவாசகர், 8, 50.
மானக்கஞ்சாற நாயனார், 143.
மூர்த்தி நாயனார், 144.
மூவர், 50, 247.
வந்தி, 222.
வனப்பகை, 105.

## 11. நூல்கள் (தமிழ்) முதலியன.


இராசராச சோழனுலா, 59.
இறையனாரகப் பொருள், 118.
எட்டுத்தொகை, 56.
கலிங்கத்துப்பரணி, 58.
காரைக்காலம்மையார் திருவிரட்டை மணிமாலை, 51.
குலோத்துங்கசோழன் பிள்ளைத் தமிழ், 60.
சிவஞான போதம், 10.
சீவக சிந்தாமணி, 72, 85.
திருக்குறள், 78, 99.
திருக்கோவையார், 51.
திருமந்திரம், 12.
திருவாசகம், 50.
திருவாமாத்தூர்க் கலம்பகம், 57.
திருவாய்மொழி, 133.
திருவாரூர்மும்மணிக்கோவை, 55.
திருவிடைமருதூர் மும்மணிக் கோவை, 55.
தேவாரம், 50, 247.
தொல்காப்பியம், 9.
பஞ்ச காப்பியங்கள், 52.
பட்டினப்பாலை, 193.
பத்துப்பாட்டு, 56.
பதினெண் கீழ்க்கணக்கு, 56.
பொன்வண்ணத்தந்தாதி, 54.


## 12. புலவர்களும் ஆசிரியர்களும்.


அகத்தியர், 9, 94, 128.
இடைக்காடர், 219.
இரட்டையர், 57.
ஒட்டக்கூத்தர், 59, 66.
ஔவை, 102.
காரியார் நாரியார், 120.
திருமாளிகைத் தேவர், 11.
திருவள்ளுவர், 14, 129.
தொல்காப்பியர், 9.
நக்கீரர், 115, 173.
பட்டினத்தார், 55.
பிள்ளைப் பாண்டியன், 66.
மெய்கண்ட தேவர், 10.
வில்லிபுத்தூராழ்வார், 66.


## 13. மதுரையின் திருநாமங்கள்.


கடம்பவனம், 138.
கூடல், 4.
சிவராசதானி, 1, 266.
சீவன் முத்திபுரம், 136.
திருவாலவாய், 134.
தென்மதுரை, 123.
மதுரை, 95.


## 14. வடமொழி நூல்கள்.


ஆகமம், 42, 203, 246.
காவியம், 43.
சாத்திரங்கள், 44, 202.
நாடகாலங்காரம், 43.
பாரதம், 45.
புராணம் பதினெட்டு, 45, 202.
மிருதி, 202.
வேதம், 42, 201.